ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு

உவேஅ
பொறுப்பார்ந்த மீன்வள நடவடிக்கைக்கு தொழில்நுட்ப வழிகாட்டு முறைகள்

11

# பொறுப்பார்ந்த மீன்வர்த்தகம்



உவேஅ
பொறுப்பார்ந்த மீன்வள
நடவடிக்கைக்கு
தொழில்நுட்ப
வழிகாட்டு முறைகள்

11

# பொறுப்பார்ந்த மீன்வர்த்தகம்

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு
ரோம் 2009

இவ்வெளியீட்டில் பயன்படுத்தப்பட்ட பெயர்க் குறிப்புகளும் அளிக்கப்பட்ட தகவல்களும் ஒரு நாட்டின் சட்டமுறையான தகுதிநிலை,பெருநிலப் பகுதி, நகரம் அல்லது பகுதியினை பற்றியோ, பிறநாட்டுடனான அந்நாட்டின் எல்லைக்கோடு அல்லது எல்லையை பற்றியோ, ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் சார்பாக குறிப்பாக எதுவும் சுட்டிக்காட்டப்படவில்லை. காப்புரிமை பெற்ற அல்லது பெறாத குறிப்பிட்ட நிறுவனங்கள் அல்லது பொருட்களின் உற்பத்தியாளர்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்பதால் குறிப்பிடப்படாத ஒரே மாதிரியான தன்மைகளுடன் கூடிய பிறவற்றில் முன்னுரிமையாக உவே அமைப்பு அவற்றைப் வழிமொழிந்ததாகவோ அல்லது பரிந்துரைத்ததாகவோ உணர்ந்து கொள்ளுதல் கூடாது.

அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தார்க்கே. இப்பதிப்பிலிருந்து எப்பகுதியையும் உரிமையாளரின் முன் அனுமதியின்றி, பதிப்பிடவோ, நினைவில் கொள்ள பதிப்பில் சேமிக்கவோ, புகைப்படம், மின்னணு இயந்திரவியல் அல்லது பிற வழிகளில் அனுப்புதலோ கூடாது. அத்தகைய அனுமதிக்கு நோக்கம் மற்றும் விபரம் குறித்த அறிவிக்கையுடன் தலைவர், மின்னியல் கொள்கை பதிப்பீடு மற்றும் தகவல்பிரிவு, ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு வியாலே, டொமே டி , காரகல்லா **00153**, ரோம், இத்தாலி என்ற முகவரிக்கு அல்லது copyright@fao.org மின்னஞ்சலில் விண்ணப்பிக்க வேண்டும்.

© உவேஅ **2009**

*வங்காள விரிகுடா திட்டத்தின் மூலம்*
*தமிழில் மொழிபெயர்த்து அச்சடிக்கப்பட்டது*
*ஆகஸ்ட் 2010*

*மொழிபெயர்ப்பு: டாக்டர் ம பரமசிவம்*

*Tamil translation by Dr M Paramasivam*

*முகப்பு அட்டைப் படம்:*
*வங்கதேசம், காக்ஸ் கடைவீதியில் மீன் இறங்குதல் மற்றும் சந்தைப்படுத்துதல்*
*உவேஅ/ ஜியுலியோ நெபோலிட்டானோ*

*Translated and Printed by the Bay of Bengal Programme*
*Inter-Governmental Organisation*
*August 2010*

**Bay of Bengal Programme**
**Inter-Governmental Organisation**
91, Saint Mary’s Road, Abhiramapuram,
Chennai - 600 018, Tamil Nadu, India
Tel: +91-44-24936294, 24936188; Fax: +91-44-24936102
Email: info@bobpigo.org; website: www.bobpigo.org

# ஆவணம் தயாரித்தல்

ஜெர்மனி பிரிமெனில் 2008 ஜுன் 6 அன்று மீன்வர்த்தகம் மீதான உவே அமைப்பின் சார் குழுவின் பதினோராவது அமர்வில் பின்பற்றப்பட்ட பொறுப்பார்ந்த மீன்வர்த்தகத்திற்கான தொழில்நுட்ப வழிகாட்டு முறைகளை இந்த ஆவணம் கொண்டுள்ளது.

2007 ஜனவரி 22 முதல் 26 வரை அமெரிக்காவில், வாஷிங்டனில் வல்லுநர் கலந்தாய்வு பொறுப்பார்ந்த மீன் வர்த்தகத்திற்கான தொழில்நுட்ப வழிகாட்டு முறைகளைப் பரிசீலித்தது. இத்தாலி ரோமில் 2007 நவம்பர் 5 முதல் 7 வரை மற்றும் ஜெர்மனி பிரிமெனில் 2008 ஜுன் 2 முதல் 3 வரை தொழில்நுட்ப கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது.

பொறுப்பார்ந்த மீன் வளத்திற்காக வளரும் நாடுகளில் நடத்தை விதித்தொகுப்பை செயல்படுத்த உவே அமைப்பின் மண்டலங்களுக்குள் உதவிடும் திட்டத்தில் மீன்விதித்தொகுப்பு நிறுவனத்திற்கு நார்வே அரசின் வழங்குதல் மூலமாக, மீன்விதித்தொகுப்பு வழங்கிய நிதியைக் கொண்டு இந்த தொழில் நுட்ப வழிகாட்டு முறைகள் அமைக்கப்பட்டன.

உவேஅ
பொறுப்பார்ந்த மீன் வர்த்தகம்
*உவேஅ பொறுப்பார்ந்த மீன்வளநடவடிக்கைக்கு தொழில்நுட்ப வழிகாட்டு முறைகள்.*
எண்.11 ரோம், உவேஅ 2000. பக்கங்கள். 28


**சுருக்கம்**

பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு கட்டுரை 11.2 ‘‘பொறுப்பார்ந்த பன்னாட்டு வணிகம்’’ மற்றும் 11.3 ‘‘மீன் வணிகம் தொடர்பான சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகள் ஆகியவற்றைச் செயல்படுத்துவதற்கு உதவிட பொதுவான அறிவுரை வழங்குவதே இந்த தொழில் நுட்ப வழிகாட்டு முறைகளின் முக்கிய நோக்கமாகும். உலகம் முழுவதிலும் பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பை செயல்படுத்தி மேலும் புரிந்து கொள்ள பரவச்செய்ய இந்த வழிகாட்டு முறைகள் உதவுகின்றன.

இரண்டு காரணங்களுக்காக இந்த வழிகாட்டு முறைகள் குறிப்பாக முக்கியமானவை:

- உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேலாக பன்னாட்டு வணிகத்திற்குள்ளாகும் விவசாயம் மற்றும் உணவுப் பொருட்களுக்குள் மீன் மற்றும் மீன் பொருட்கள் அடங்கும். எனவே இப்பிரிவில் ஈடுபடும் அனைவரும் அதே மாதிரியான விதிகளுக்கு ஏற்ப இயங்க வேண்டும் என்பதனை உறுதி செய்வதை குறிப்பாக இது முக்கியப்படுத்துகிறது.

- வளரும் நாடுகளுக்கு மீன் மற்றும் மீன்பொருள் வர்த்தகம் மிகவும் முக்கியமானது. பன்னாட்டு மீன் மற்றும் மீன் பொருள் வர்த்தகத்தின் 50 சதவிகிதத்திற்கு மேல் வளரும் நாடுகளில் இருந்தே தொடங்குகிறது. அந்த நாடுகளுக்கு வருமானம், வேலை வாய்ப்பு மற்றும் அந்நியச் செலாவணி அளிக்கும் ஆதாரங்களில் இது மிகவும் முக்கியமானது.

# உள்ளடக்கம்

பக்கம்

ஆவணம் தயாரித்தல் ........ 3

சுருக்கம் ........ 4

சொல் சுருக்கம் ........ 6

பின்னணி ........ 7

முன்னுரை ........ 9

கட்டுரை 11 அறுவடைக்குப்பின் பிடித்த மீனைக் கையாளும் முறைகளும், வணிகமும் ........ 13

கட்டுரை 11.2 பொறுப்பார்ந்த பன்னாட்டு வணிகம் ........ 13

கட்டுரை 11.3 மீன் வணிகம் தொடர்பான சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகள் ........ 25

பார்வைக்குறிப்புகள் ........ 28

# சொல் சுருக்கம்

| | |
|---|---|
| சிஏசி | கொடக்ஸ் அலிமண்டேரியஸ் கமிஷன் |
| பொமீவநவிதொ | பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு |
| ஆஉபவம | இயற்கை விலங்கு மற்றும் தாவர வகைகளில் ஆபத்தில் உள்ள உயிரினங்களின் பன்னாட்டு வர்த்தக மரபு |
| மீகு | மீன்வள குழு |
| ததீஆ | தகராறை தீர்வு செய்யும் அமைப்பு |
| ததீபு | தகராறு தீர்வுகளைப் புரிந்து கொள்ளுதல் |
| தபொம | தனிப்பட்ட பொருளாதார மண்டலம் |
| உவேஅ | ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு |
| கவபொஓ | கட்டண விகிதம் மற்றும் வர்த்தகம் மீதான பொதுவான ஒப்பந்தம் |
| சஅக | சட்டத்திற்குப்புறம்பான அறிவிக்கப்படாத கட்டுப்பாடற்ற மீன்பிடிப்பு |
| பெவிநா | பெரும்பான்மையாக விரும்பப்படும் நாடு |
| புஒ | புரிந்துணர்வு ஒப்பந்தம் |
| பொஒமேநி | பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான நிறுவனம் |
| விஉஉநி | விலங்குகளின் உடல் நலத்திற்கான உலக நிறுவனம் |
| மமீவமேநி | மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனம் |
| சுதாசாசுஉ | சுகாதாரம் மற்றும் தாவரம் சார்ந்த சுகாதாரம் பற்றிய உடன் படிக்கை |
| வதொத | வர்த்தகத்தில் தொழில்நுட்ப தடங்கல் மீதான உடன் படிக்கை |
| ஐநா | ஐக்கிய நாடுகள் அமைப்பு |
| ஐநாசுமேகூ | சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாடு மீதான ஐக்கிய நாடுகளின் கூட்டம் |
| ஐநாகசச | ஐக்கிய நாடுகளின் கடல் சட்ட சம்பிரதாயங்கள் |
| உசுநி | உலக சுங்க நிறுவனம் |
| உசுநி | உலக சுகாதார நிறுவனம் |
| வமேஉநி | வளம்குன்றாத மேம்பாடு மீதான உலக நிலை |
| உவநி | உலக வர்த்தக நிறுவனம் |

# பின்னணி

1) மனித இனத்திற்கு மீன்பிடிப்பு முக்கிய உணவு ஆதாரமாக தொன்று தொட்டு விளங்குகிறது. இந்நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார நன்மைகள் கிடைக்கின்றன. எனினும், வளர்ந்து வரும் அறிவு மற்றும் மீன்வள தொழில் நுட்பங்களின் வளர்ச்சியினால் தொழில் புதுப்பிக்கப்பட்ட போதிலும் மீன்வள ஆதாரங்கள் எல்லையற்றது அல்ல. வளர்ந்து வரும் உலக மக்கட்தொகைக்கு சத்துணவு, பொருளாதாரம் மற்றும் சமூக நலம் ஆகியவற்றில் அவற்றின் பங்கு நிலை நிறுத்தப்படுவதற்கு, மீன்வள ஆதாரங்களை முறையாக நிர்வகிக்கும் தேவை உள்ளது என்பது உணரப்படுகிறது.

2) 1982–ல் ஐக்கிய நாடுகளின் கூட்டமைப்பு உருவாக்கி ஏற்றுக் கொண்ட கடல் சட்டம் கடல் சார் ஆதாரங்களை நல்ல முறையில் நிர்வகிக்க புதிய வடிவமைப்பை வழங்கியது. உலக கடல் மீன்வளத்தில் 90 சதவீதம் தன்னுள் கொண்டிருக்கும் பிரத்யேக பொருளாதார மண்டலத்தில் மீன்வள ஆதாரங்களைப் பயன்படுத்த மற்றும் நிர்வகிக்க பொறுப்புகளை கடலோர நாடுகளுக்கு புதிய ஆழ்கடலின் சட்ட அமைப்பு வழங்கியது.

3) சமீப காலங்களில் உணவுத்துறையில் உலக மீன்வளப்பிரிவு மிக விரைவாக முன்னேறுகிறது. மீன் மற்றும் மீன்வள பொருட்களுக்கு உலக அளவில் உயர்ந்து வரும் தேவைக்கு ஏற்ப புதிய மீன் பிடி கப்பல்கள் மற்றும் மீன் பதப்படுத்தும் தொழில்களில் கடலோர நாடுகள் முதலீடு செய்து அவ்வாய்ப்புகளை சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கட்டுப்பாடற்ற வகையில் மீன் பிடித்தல் அடிக்கடி மேற்கொள்ளப்படுவதால் பல மீன்வள ஆதாரங்கள் நிலை நிறுத்தப்பட இயலாதவை ஆகிவிடும் என்பது உண்மை.

4) முக்கிய மீன் இருப்புகள் அளவுக்கதிகமாக பிடிக்கப்படுவதற்கு தெளிவான அடையாளங்கள், சுற்றுச் சூழல் அமைப்பில் மாறுபாடுகள், குறிப்பிடக் கூடிய பொருளாதார பின்னடைவுகள், மேலாண்மை மற்றும் மீன் வர்த்தகம் இடையே ஏற்படும் பன்னாட்டு கருத்து வேறுபாடுகள் ஆகியவை மீன்வளத்தின் நீண்ட வளங்குன்றாத தன்மையையும் மற்றும் உணவு விநியோகத்தில் மீன்வளத்தின் பங்கினையும் அச்சுறுத்துகின்றன. ஆகையால், உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் மீன்வளக்குழு 1991 மார்ச்சில் நடைபெற்ற 19வது அமர்வில் பாதுகாப்பு மற்றும் சுற்றுச் சூழல் அடங்கிய மீன்வள மேலாண்மைக்கு புதிய வகைமுறைகளை பரிந்துரைத்தது. அவ்வாறே சமூக பொருளாதார பரிசீலனைகளும் உடனடியாக தேவைப்படுகின்றன. பொறுப்பார்ந்த மீன்வள நடவடிக்கை கருத்தை ஏற்படுத்த உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன் பயன்பாடுகளை வளர்க்க நடத்தை விதித் தொகுப்பை விரிவு படுத்த கேட்டுக் கொள்ளப்பட்டது.

5) மெக்சிகோ அரசு, உணவு மற்றும் வேளாண்மை அமைப்புடன் இணைந்து பொறுப்பார்ந்த மீன்பிடிப்பு பற்றி கான்கனில் பன்னாட்டு கூட்டத்திற்கு மே 1992ல் ஏற்பாடு செய்தது. கான்கன் அறிவிக்கை அக்கூட்டத்தில் மேலொப்பம் இடப்பட்டு பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பை தயாரிக்க ஆதரவு அளித்திட UNCED Rio Summit கவனத்திற்கு 1992ல் கொண்டு வரப்பட்டது. 1992 செப்டம்பரில் நடைபெற்ற ஆழ்கடல் மீன்பிடிப்பின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் தொழில் நுட்ப கலந்தாய்வு ஆழ்கடல் மீன் பிடிப்பு குறித்தான பிரச்சினைகளுக்கு தீர்வாக விதித் தொகுப்பை மேலும் விரிவாக்க பரிந்துரைத்தது.

6) 1992 நவம்பரில் நடைபெற்ற 102வது அமர்வில் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் குழு விதித் தொகுப்பை விரிவாக்குவது பற்றி விவாதித்தது. ஆழ்கடல் மீன் பிடிப்பு பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க பரிந்துரைத்தது. 1993ல் நடைபெற இருந்த மீன் வள குழுவிற்கு விதித் தொகுப்பு கருத்துருவை அளிக்க கேட்டுக் கொண்டது.

7) 1993 மார்ச்சில் நடைபெற்ற மீன்வளக்குழுவின் 20வது அமர்வு அத்தகைய விதித்தொகுப்பின் வழிகாட்டு முறைகளையும் சேர்த்த உள்ளடக்கத்தையும் முன்மொழியப்பட்ட வடிவமைப்பையும் பொதுவாக பரிசீலித்தது. விதித்தொகுப்பை மேலும் விரிவாக்க காலக் கெடு வழங்கியது. விதித்தொகுப்பின் பகுதியாக "அதிவேக" அடிப்படையில், ஆழ்கடலில் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளைப் பாதிக்கும் கலன்களுக்கு மறு கொடி இடுதலை தவிர்க்க கருத்துரு தயார் செய்ய உணவு மற்றும் வேளாண்மை அமைப்பை கேட்டுக் கொண்டது. 1993 நவம்பரில் 27வது அமர்வில் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் கூட்டம், ஆழ்கடலில் மீன் பிடிக்கும் கலன்கள் பன்னாட்டு பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளுக்கு இணங்குதலை ஊக்குவிக்கும் ஒப்பந்தத்தை பின்பற்றுவதில் முடிந்தது. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் கூட்ட தீர்மானம் 15/93 ன்படி இது விதித் தொகுப்பில் இணைப்பு பகுதியாக இணைந்தது.

8) தொடர்புடைய ஐக்கிய நாட்டு முகமைகள் மற்றும் பிற அரசு சாரா நிறுவனங்கள் உள்ளிட்ட பன்னாட்டு நிறுவனங்களுடன் கலந்து ஆலோசித்து விதித்தொகுப்பின் வளர்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

9) விதி தொகுப்பு 5 அறிமுக கட்டுரைகள் கொண்டது. அவை தன்மை மற்றும் நோக்கம், குறிக்கோள் பிற பன்னாட்டு காரணகர்த்தாவினருடன் தொடர்பு, செயல்பாடு, கண்காணிப்பு மற்றும் புதுப்பித்தல் மற்றும் வளரும் நாடுகளுக்கான சிறப்பு தேவைகள் ஆகும். இந்த 5 அறிமுக கட்டுரைகளை தொடர்ந்து பொது கோட்பாடுகள் என்ற கட்டுரை அமையும். அதைத்தொடர்ந்து மீன்வள மேலாண்மை, மீன்பிடி நடவடிக்கை, நீர்வாழ் உயிரின மேம்பாடு, கடலோர மேலாண்மையுடன் இணைந்த மீன்வளம், பிடித்த மீன்களை பாதுகாக்கும் அறுவடைக்குப்பிந்தைய செயல்பாடு விற்பனை மற்றும் மீன்வள ஆராய்ச்சி என்ற 6 தலைப்பில் கட்டுரைகள் இடம் பெறும். முன்பே தெரிவித்தவாறு ஆழ்கடல் மீன்பிடிப்பு கலன்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய பன்னாடுகளுக்கிடையே ஆன பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை பற்றிய இணக்கத்தை ஊக்குவிக்கும் ஒப்பந்தம், சட்ட விதித் தொகுப்பு நடவடிக்கைக்கு ஒரு அங்கமாக அமைந்தது.

10) நடத்தை விதி தொகுப்பு சுய விருப்பமானது. எனினும் அவற்றின் சில பகுதிகள் டிசம்பர் 10 1982 கடல் சட்டத்தில் தெரிவித்துள்ள பன்னாட்டு விதிகளின் அடிப்படையில் ஆனவை. ஆழ்கடல் மீன்பிடிப்பு கலன்கள் பாதுகாத்தல் மேலாண்மை பற்றி கடைபிடிக்கப்பட வேண்டிய இணக்கத்தை ஊக்குவிக்கும் 1993ல் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் போன்றவற்றை குழுவினர் இடையே சட்டப்படி கட்டுப்படும் காரணகர்த்தாக்களுக்கு கட்டுப்படுத்துகிற பகுதிகளையும் விதி தொகுப்பு கொண்டுள்ளது.

11) 31.10.1995 அன்று பொறுப்பார்ந்த மீன்பிடிப்பிற்கான நடத்தை விதிகளை 28வது கூட்ட அமர்வு 4/95 தீர்மானத்தில் ஏற்றுக்கொண்டது. அதே தீர்மானத்தில் விதித் தொகுப்பினை நடைமுறைப்படுத்த உதவியாக பொருத்தமான தொழில் நுட்ப வழிகாட்டு முறைகளை உறுப்பினர் மற்றும் ஆர்வமுடைய உகந்த நிறுவனங்களுடன் இணைந்து உருவாக்கித் தர உணவு மற்றும் வேளாண்மை அமைப்பை கேட்டுக் கொண்டது.

**முன்னுரை**

பொறுப்பார்ந்த மீன் வர்த்தகத்திற்கான இந்த வழிகாட்டு முறைகளுக்கு சட்ட அந்தஸ்து ஏதும் இல்லை. பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பின் (பொமீவநவிதொ) கட்டுரை 11.2 பொறுப்பார்ந்த பன்னாட்டு வணிகம் மற்றும் கட்டுரை 11.3: மீன் வணிகம் தொடர்பான சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகள் ஆகியவற்றை செயல்படுத்துவதற்கு உதவிட பொதுவான அறிவுரை வழங்குவதற்கானவை. மேலும் பொமீவநவிதொகுப்பை தன்னார்வத்துடன் செயல்படுத்தவும் அதனை உலகம் முழுவதிலும் மேலும் பரவச் செய்வதற்கு உதவுவதற்குமானவை.

பெரும்பான்மையாக வர்த்தகப்படுத்தப்படும் விவசாயம் மற்றும் உணவுப் பொருட்களின் உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேலாக பன்னாட்டு வணிகத்திற்குள்ளாகும் மீன் மற்றும் மீன் பொருட்கள் அடங்கும். பரவலான வரிசையில் மீன் உற்பத்தி பொருட்களின் வகைகள் மற்றும் சந்தை ஆகியவை குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சங்களாகும். குறிப்பிடத்தக்க வகையில், பன்னாட்டு மீன்வர்த்தகத்தில் பாதி வளரும் நாடுகளில் இருந்து தொடங்குகிறது. அவற்றிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதில் மீன் முக்கியமானதாகும். மீன் பொருட்களின் மொத்த இறக்குமதி மதிப்பில் 80 சதவிகிதத்திற்கு மேலாக வளர்ந்த நாடுகள் கணக்கிடுகின்றன.

மீன் மற்றும் மீன் பொருட்களில் வர்த்தகம் சக்தி வாய்ந்தது. மீன்பிடிபாடு ஒரே நிலையை அடைந்து விட்ட நிலையில், நீர்வாழ் உயிரின வளர்ப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. பிரிவின் விநியோகத்தின் தன்மையை பாதிப்பு அடையச் செய்கிறது. பதப்படுத்தும் நடவடிக்கைகளின் தன்மை மற்றும் இருப்பிடம் உள்ளிட்ட விநியோகச் சங்கிலி, தொடர்ந்து மாற்றங்களுக்கு ஏற்ப தன்னை சரிப்படுத்திக் கொள்கிறது. மாற்றங்கள் தொழில்நுட்பம், தொடர்பு மற்றும் எடுத்துச் செல்லுதலில் ஏற்படுகின்றன. இலவச வர்த்தகம் மற்றும் தாராளமயமாக்கப்பட்ட சந்தைகள் ஆகியவை பிரிவின் உலகளாவிய தன்மையை அதிகரிக்கச் செய்துள்ளன. தேவை மற்றும் விநியோக தன்மைகளின் உலகளாவிய மண்டல மற்றும் தேசீய மாற்றங்களுக்கு வர்த்தகம் மிகவும் அக்கறை கொண்டுள்ளது. மீன் மற்றும் மீன் பொருட்களுக்கான தேவை உபயோகிப்பாளரின் விருப்பத் தேர்வுகளில் மற்றும் வாங்கும் சக்தியில் ஏற்படும் மாற்றங்களையும் அவ்வாறே புள்ளி விபர ஆய்வு மாற்றங்களையும் பிரதிபலிக்கிறது.

பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பின் பொதுவான கொள்கைகள் பிரிவில் கட்டுரை 6.14 குறிப்பாக உணர்த்துவதாவது:*மீன் மற்றும் மீன் உபபொருட்களுக்கான பன்னாட்டு வணிகம், உலக வணிக அமைப்பு (World Trade Organisation) உடன்படிக்கை மற்றும் தொடர்புடைய பன்னாட்டு உடன்படிக்கைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள கொள்கைகள், உரிமைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கிணங்க நடத்தப்பட வேண்டும். நாடுகள் அவைகளின் மீன் மற்றும் மீன் உபபொருள் பற்றிய வணிகக் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் நடைமுறைகள் மீன் மற்றும் மீன் உபபொருட்கள் வணிகத்திற்குத் தடை ஏற்படா வண்ணமும், சுற்றுச்சூழலைப் பாதிக்காவண்ணமும், சத்துணவு குறையா வண்ணமும் சமூக வளர்ச்சிக்குக் கேடு விளையாவண்ணமும் அமைந்திருக்க உறுதி செய்ய வேண்டும்.*

மேலே குறிப்பிட்டவாறு, மீன் மற்றும் மீன்பொருட்கள் பரவலாக வர்த்தகப்படுத்தப்படுகிறது. நுகர்வுக்கு ஏற்ப உற்பத்திக்கான வர்த்தக தொடர்பு, வளம் குன்றாத வகையில் மேலாண்மை முறைகள் உற்பத்திக்கு ஆதரவாக அமைவதை உறுதி செய்வதை அவசியமாக்குகிறது. பன்னாட்டு வர்த்தகத்தின் மூலம் பெறப்படும் பயன்கள் அதிக வருமானம், வேலைவாய்ப்பு மற்றும் அந்நியச் செலாவணி ஆகியவற்றை உள்ளடக்கும். தற்போது சான்றிடுதல் மற்றும் அடையாளம் காணுதல் பாதுகாப்பு மற்றும் தன்மை குறித்த தொழில் நுட்ப பிரச்சினைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய வரி மற்றும் வரியின்மை தடைகள் போன்றவை வர்த்தகத்திற்கு முக்கிய தடைகளாக உள்ளன. வர்த்தகத்தின் மீது பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய மற்றும் தொடர்ந்து

கருத்தில் கொள்ள வேண்டிய பிற பிரச்சினைகள், வர்த்தகம் மற்றும் சுற்றுப்புறச் சூழ்நிலைக்கு தீங்காகும் மான்யங்களாகும். குவித்தலுக்கான தடையை தவறாக பயன்படுத்துதல், எதிர்ஈடு செய்தல் மற்றும் பாதுகாப்பு முறைகளும் கருத்தில் கொள்ளவேண்டியவையே. மேலும் கூடுதலாக சந்தை விபரங்களை வளரும் நாடுகளில் உற்பத்தியாளர்களும் வர்த்தகர்களும் அறிவது கடினம் என்பதால் அவர்கள் பாதகமான நிலையில் உள்ளனர்.

உவே அமைப்பின் மீன் வளகுழுவின் மீன் வர்த்தகத்திற்கான சார்குழு நாடுகளுக்கு மன்ற அமைப்பை வழங்குகிறது. உற்பத்தி மற்றும் நுகர்வு பிரிவுகள் உள்ளிட்ட மீன் மற்றும் மீன் பொருட்களின் பன்னாட்டு வர்த்தகத்தில் தொழில்நுட்பம் பொருளாதாரம் மற்றும் சுற்றுப்புறச்சூழ்நிலை பிரிவுகளைப் பற்றி இது கலந்து ஆலோசிக்கும். உவே அமைப்பின் மீன் வளகுழுவின் மீன்வர்த்தகத்திற்கான சார்குழு தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பான பிரச்சினைகளையும் கவனிக்கும். மீன் வர்த்தகத்திற்கான உவேஅ சார்குழு மிகவும் முக்கியமான அமைப்பாகும். இதில் நாடுகள் இப்பிரச்சினைகளில் தங்கள் கருத்துகளை பகிர்ந்து கொள்ளலாம். புதிய மேம்பாடுகளை பரிசீலிக்கலாம். மேலும் பணிபுரிய பகுதிகளை பரிந்துரைக்கலாம்.

உலக அளவில் மற்றும் ஐக்கிய நாடுகளின் அமைப்பில் (ஐநா) அதுவும் குறிப்பாக உவேஅ, மீன் பொருட்களுக்காக உலக வர்த்தக முறையை அமைப்பதில் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றன. வளம் குன்றாத வளர்ச்சி, சுற்றுப்புறத்தைப் பாதுகாத்தல், உணவுப் பாதுகாப்பு மற்றும் தன்மை மற்றும் ஆபத்து இன்மை தொடர்பான பிரச்சினைகளை ஐநா நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. உவநிறுவன ஒப்பந்தங்களில் உள்ள பன்னாட்டு வர்த்தகம் தொடர்பான விதிகள் உவநிறுவனத்தில் பேரம் பேசப்படுகின்றன. உவநி மற்றும் பிற நிறுவனங்கள் ஒன்றாக நாடுகளுக்கு மீன் மற்றும் மீன் பொருட்களின் வர்த்தகம் உள்ளிட்ட பன்னாட்டு வர்த்தகத்திற்கு உரிய விதிகள் மற்றும் வரையறையை அமைப்பதில் ஒத்துழைக்க பார்வைக்காக வடிவமைப்பை வழங்குகிறது.

பொருட்கள், சேவை மற்றும் முதலீடுகள் ஆகியவற்றிற்காக பன்னாட்டு வர்த்தகத்தை தாராளமயமாக்குதல் மற்றும் வர்த்தகம் ஆகிய வற்றிற்காக விதிகளின் அடிப்படையில் அமைந்த வடிவமைப்பை நிறுவிடும் நோக்கத்தில் பல வரிசையான ஒப்பந்தங்கள் உள்ளன. அவற்றையே உவநிறுவன அமைப்பு அடிப்படையாகக் கொண்டுள்ளது. கட்டணவிகிதம் மற்றும் வர்த்தகம் மீதான பொதுவான ஒப்பந்தம் (கவபொஒ), பொருட்களின் வர்த்தகத்தை தாராள மயமாக்குதலுக்கு வகை செய்கிறது. வரியை படிப்படியாக குறைத்தல், வரியற்ற இறக்குமதி கட்டுப்பாட்டை மாற்றி வரி உள்ளதாக்குதல், (வரி விதித்தல்) மற்றும் உள்நாட்டு ஆதரவை திரித்துக் கூறும் வர்த்தகத்தை விலக்குதல் ஆகியவற்றின் மூலம் வகை செய்கிறது. கவபொ ஒப்பந்தத்தின் கீழ் வளரும் நாடுகளுக்கு தனித்த கவனிப்பு வழங்கப்பட்டுள்ளது. வரியை மற்றும் வர்த்தகத்திற்கு ஏற்படும் தடைகளை குறைப்பதற்கு மிகுந்த கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. வர்த்தகத்தை தாராள மயமாக்குதலைப் பின்பற்ற உதவிடுவதற்கு பிற தனிப்பட்ட வசதிகளும் உள்ளன.

உவேஅ மற்றும் (உசுநி) உலக சுகாதார நிறுவனம் ஆகியவை **1963** கொடக்ஸ் அலிமண்டேரியங் கமிஷனை நிறுவியது. இது உணவு வரையறை, வழிமுறைகள் மற்றும் உவேஅ/ உசுநி இணைந்த உணவு வரையறை திட்டங்களில் பயன்படுத்த விதித் தொகுப்பு போன்ற தொடர்புடைய புத்தகங்களை மேம்படுத்தும். நுகர்வோரின் நலம் பேணுதல், உணவு வர்த்தகத்தில் நியாயமான முறைகளை உறுதிப்படுத்துதல், பன்னாட்டு அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மேற்கொள்ளும் அனைத்து உணவு வரையறைப் பணிகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

விலங்குகளின் உடல் நலத்திற்கான உலக நிறுவனம் (விஉஉநி) 1924ல் நிறுவப்பட்டது. விலங்குகளின் நோய்கள் தொடர்பாக உலக அளவில் வெளிப்படையை உறுதி செய்வதற்காக இது நிறுவப்பட்டது. விஉஉநி கால்நடை விஞ்ஞான விபரங்களை சேகரித்து பரிசீலித்து பரப்புகிறது. விலங்குகளின் நோய்களை கட்டுப்படுத்துவதில் நிபுணத்துவம் வழங்குகிறது. விஉஉநி விதிகளை மேம்படுத்துகிறது. நோய்கள் மற்றும் நோய்க்கிருமிகள் அறிமுகம் ஆவதற்கு எதிரான பாதுகாப்பிற்காக பயன்படுத்தப்படும் வரையறைகளை மேம்படுத்துகிறது. உலக வர்த்தக நிறுவனம் விஉஉநிறுவன வரையறைகளை பன்னாட்டு சுகாதார விதிகளுக்கு பார்வைக்குறிப்பாக அங்கீகரிக்கிறது.

இயற்கையான விலங்கு மற்றும் தாவர வகைகளில் ஆபத்தில் உள்ள உயிரினங்களின் பன்னாட்டு வர்த்தக மரபு ( ஆஉபவம) சிற்றின வகை அளவில் அழிந்து போகக் கூடிய அச்சத்தில் உள்ள சிற்றின வகைகளின் பன்னாட்டு வர்த்தகத்தை அல்லது அச்சிற்றின வகை மாதிரிகளின் பன்னாட்டு வர்த்தகத்தால் அது அச்சமூட்டப்படுவதை கட்டுப்படுத்துகிறது. ஆஉபவ மரபின் இணைப்புகளில் பல மீன் மற்றும் கிளிஞ்சல் சிற்றின வகைகள் பட்டியல் இடப்பட்டுள்ளன.

## 11 அறுவடைக்குப்பின் பிடித்த மீனைக் கையாளும் முறைகளும், வணிகமும்

### கட்டுரை 11.2 பொறுப்பார்ந்த பன்னாட்டு வணிகம்

**11.2.1 உலக வர்த்தக நிறுவன உடன்படிக்கையில் உள்ளபடி (உவநி) அமைப்புகளுடன் கொள்கைகள், உரிமைகள், கடமைகள் ஆகியவற்றிற்குத் தக்கவாறு இந்த விதித்தொகுப்பினை பொருளுடையதாக்கிச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.[1]**

1. உவநிறுவனத்தின் பன்னாட்டு வர்த்தக விதிகளின் கீழ் மீன் மற்றும் மீன் பொருட்களின்[2] பன்னாட்டு வர்த்தகம் அடங்கும். வரி, வரியின்மை முறைகள், உணவுப் பாதுகாப்பு மற்றும் தன்மை உள்ளிட்ட நுட்ப வரையறைகள், தோற்றம் குறித்த விதிமுறைகள், குவியல் தடுப்பு முறைகள், மான்யங்கள், ஆபத்து இன்மை, சேவையில் வணிகம், அறிவு சார் சொத்து மற்றும் தகராறுகளை தீர்வு செய்தல்[3] போன்ற பிரச்சினைகளை உவநிறுவன ஒப்பந்தங்கள் தெரிவிக்கின்றன.

2. உவநிறுவன ஒப்பந்தங்கள்[4] இரண்டு அடிப்படையான கொள்கையில் அமைந்தவை: பெரும்பான்மையாக விரும்பப்படும் (பெவிநா) நாட்டின் நடத்தும் முறை மற்றும் நாட்டின் நடத்தும் முறை. பெவி நாட்டின் கொள்கைக்கு நாடுகள் எல்லையில் பிற உலக வர்த்தக நிறுவன உறுப்பினர் நாடுகளில் இருந்து பெறப்படும் அதே மாதிரியான பொருட்களுக்கு வழங்கப்படும் நடத்தும் முறையை வழங்க வேண்டும் என்பது தேவையாகிறது. பிற உவநிறுவன உறுப்பினரின் சுங்க எல்லைக்குள் நுழையும் ஒரு பொருள் அந்த உறுப்பினர் இறக்குமதி செய்யப்படும் உறுப்பினர் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அப்பொருளுக்கான ஆதரவிற்கு சற்றும் குறையாத வகையில் நடத்த வேண்டும் என்பது நாட்டின் நடத்தும் முறைக்கு தேவையாகிறது.

3. ஒப்பந்தங்களில் பல விரிவானவை, தொழில்நுட்பம் வாய்ந்தவை. ஆனால் சில பிரபலமான கொள்கைகள் உள்ளன. உதாரணமாக, வர்த்தகம் பாகுபாடு இன்றி மேற் கொள்ளப்பட வேண்டும். தாராளமான உறுப்பினர்களுக்குள் மற்றும் உறுப்பினர்களுக்கிடையே பேச்சு வார்த்தையை அடிப்படையாகக் கொண்ட வர்த்தகத்தை நோக்கி நிதானமான இயக்கம் இருத்தல் வேண்டும். உலக வர்த்தக நிறுவனத்திற்குள் முடிவுகள் மேற்கொள்ளுதல் உறுப்பினர்களின் ஒருமனதான உடன்பாட்டின் அடிப்படையில் அமையும் உவநி தகராறு தீர்வுக்கான புரிந்து கொள்ளுதலை (ததீபு) நிறுவியுள்ளது. இதனால் உறுப்பினர்கள் மறுப்புகளை வகைப்படுத்தவும் மற்றும் வர்த்தக தகராறுகளுக்கு விடைகாணவும் முடிகிறது. தகராறை தீர்வு செய்யும் அமைப்பு (ததீஅ) மேற்கொள்ளும் முடிவுகளை நாடுகள் கவனத்தில் கொள்ள வேண்டும். ததீ அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளை கவனத்தில் கொண்டு, நாடுகள் மீன் மற்றும்

---

[1] இந்த ஆவணத்தின் பகுதி முழுவதிலும் தடித்த உரை பொறுப்பார்ந்த மீன் வள நடத்தை விதித்தொகுப்பின் கட்டுரை 11.2 மற்றும் 11.3 ஐ குறிக்கும்.

[2] தொழில் நுட்ப வழிகாட்டு முறைகள் ''மீன் மற்றும் மீன் பொருட்களை'' உணர்த்தும் மேலும் தெளிவாக்க மீன்பிடிபாடு மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆகிய இரண்டிலிருந்தும் பெறப்படும் பொருட்களை குறிக்க பயன் படுத்தப்படுகிறது. பொமீவநவிதொ கட்டுரைகள் மீன் மற்றும் மீன் பொருட்களை மட்டுமே குறிப்பிடுகின்றன.

[3] கீழ்க்கண்ட உவநிறுவன ஒப்பந்தங்கள் மீன் மற்றும் மீன் பொருட்களுக்கு குறிப்பான தொடர்பு உடையவை: வரிகள் மற்றும் வர்த்தகம் மீதான பொதுவான ஒப்பந்தம் 1994; சுகாதாரம் மற்றும் தாவரம் சார்ந்த சுகாதார முறைகளைப் பயன்படுத்துதல் குறித்த ஒப்பந்தம்; வர்த்தகத்திற்கு தொழில்நுட்ப தடைகள் மீதான ஒப்பந்தம்; வர்த்தகம் தொடர்பாக முதலீடு முறைகள் மீதான ஒப்பந்தம்; வரிகள் மற்றும் வர்த்தகம் மீதான பொதுவான ஒப்பந்தம் 1994 ன் கட்டுரை 6 ஐ செயல்படுத்துவதற்கான ஒப்பந்தம்; தோற்றத்திற்கான விதிகள் மீதான ஒப்பந்தம்; மான்யங்கள் மற்றும் எதிர்ஈடு செய்தல் முறைகள் மீதான ஒப்பந்தம்; ஆபத்து இல்லாத தன்மை மீதான ஒப்பந்தம்; அறிவுசார் சொத்து உரிமை வகை வர்த்தகம் மீதான ஒப்பந்தம்; மற்றும் விதிகளை மற்றும் தகராறுகளைத் தீர்வு செய்தலுக்கான முறைகளைப் புரிந்து கொள்ளுதல். மீன் மற்றும் மீன் பொருட்கள் விவசாயத்திற்கான ஒப்பந்தத்தில் அடங்காது.

[4] உவநிறுவன ஒப்பந்தங்களை உவநிறுவன வலைத்தளத்தில் காணலாம்: www.wto.org.

மீன் பொருட்கள் வர்த்தகம் தொடர்பான தங்கள் முறைகள் மற்றும் செய்முறைகள் உவநிறுவன ஒப்பந்தத்தில் நிறுவப்பட்டுள்ள கொள்கைகள், உரிமைகள் மற்றும் கடமைகளுக்கு இணக்கத்தினை தொடர்கிறதா என்பதனைப் பரிசீலிக்க வேண்டும்.

4. பன்னாட்டு வர்த்தகம் மிகவும் சுறுசுறுப்பானது. இவ்விதத்தில் நாடுகள் தங்கள் வர்த்தக விதிகள் மற்றும் பன்னாட்டு சட்ட ரீதியான தேவைகள் உவநிறுவனத்தின் வடிவமைப்போடு இணக்கமாக உள்ளதா என்பதனை மதிப்பீடு செய்து கொள்ள வேண்டும். பன்னாட்டு மீன் மற்றும் மீன்சார்ந்த துணைப் பொருட்களின் வணிகம் செழிக்க நீண்ட காலம் நிலைநிறுத்தக்கூடிய மீன் இருப்பு மற்றும் நீர்வாழ் வளங்களை விட்டுக் கொடுக்காவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

### 11.2.2 பன்னாட்டு மீன் மற்றும் மீன்சார்ந்த துணைப் பொருட்களின் வணிகம் செழிக்க நீண்ட காலம் நிலைநிறுத்தக்கூடிய மீன் இருப்பு மற்றும் நீர்வாழ் வளங்களை விட்டுக் கொடுக்காவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

5. வளம்குன்றாத மீன்வர்த்தகத்திற்கு அடிப்படை வழங்குவதற்கு, நீண்ட கால பாதுகாப்பு மற்றும் நீர்வாழ் உயிரின ஆதாரங்களின் வளம்குன்றாத பயன்பாடு ஆகியவற்றை நிறைவேற்ற நாடுகள் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளைப் பின்பற்ற வேண்டும். பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகள் கிடைக்கக்கூடிய விஞ்ஞான பூர்வமான ஆதாரங்களின் அடிப்படையில் அமைதல் வேண்டும். அவற்றின் சாதகமான பயன்பாட்டிற்கான நோக்கங்களை மேம்படுத்தக்கூடிய அளவில் நீண்ட காலத்திற்கு மீன்வள ஆதாரங்கள் வளம் குன்றாத வகையை உறுதி செய்யும் அளவில் வடிவமைக்கப்பட வேண்டும். உயிரியல் பொருளாதாரம் மற்றும் சமூக அளவில் வளம் குன்றாத தன்மை ஆகியவற்றின் அளவை விவரிக்கும் சுட்டிக்காட்டிகளை மேம்படுத்துதல், முன்னெச்சரிக்கை அணுகுமுறையை செயல்படுத்துதல் மற்றும் சூழல் அமைப்பு அணுகுமுறையைப் பயன்படுத்துதல் ஆகியவற்றிற்கான தேவையை நாடுகள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

6. வளம்குன்றாத வர்த்தகத்திற்கு[5] பொறுப்பார்ந்த மீன்வள மேலாண்மை முறைகள் தேவையான முன் நிபந்தனை என்ற முறையில், போதிய பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகள் இல்லாத நிலையில், பன்னாட்டு சந்தைகளில் விநியோகிக்க அதிகரித்து வரும் மீனின் தேவை அளவுக்கு அதிகமான மீன்பிடிப்பை வற்புறுத்துவதில் முடிவடையும் என்பதனை நாடுகள் உணர வேண்டும். இது அளவுக்கு அதிகமான மீன்பிடிப்பு மற்றும் வீணான பயன்பாட்டிற்கு கொண்டு செல்லும். இது உணவுப் பாதுகாப்பு மற்றும் வறுமை மீது குறிப்பாக உணவில் மிக அதிக அளவில் மீன்களை சார்ந்துள்ள இடங்களில் கணிசமான பாதிப்புகளை ஏற்படுத்தும். மீன் மற்றும் மீன் பொருட்களின் பன்னாட்டு வார்த்தகத்தில் ஈடுபட்ட அனைத்து நபர்களும் மற்றும் அமைப்புகளும் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகள் மீன்பிடிபாடு மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆகியவற்றின் வளம்குன்றாத மேம்பாட்டிற்கும் நீர்வாழ் உயிரின ஆதாரங்களின் பொறுப்பார்ந்த பயன்பாட்டிற்கும் இணக்கமாக இருத்தலை உறுதி செய்ய வேண்டும். மீன்வள பாதுகாப்பு முறைகளின் செயல்திறனை பலவீனப்படுத்தாத வகையில் இருக்க வேண்டும்.

7. உவ நிறுவனத்தில் உறுப்பினராக உள்ள நாடுகள் மீன் மற்றும் மீன் பொருள் வர்த்தகம் தொடர்பான நீர்வாழ் உயிரின ஆதாரங்களை பாதுகாக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகள் உவநிறுவனத்தின் கட்டுப்பாடுகளுக்கு இணக்கமாக இருத்தலை உறுதி செய்ய வேண்டும். உவநிறுவனத்தின் உறுப்பினர்களுக்கு இடையேயான பகிரங்க வர்த்தகத்திற்கான பொதுவான தேவைக்கு குறிப்பிட்ட சூழ்நிலையில் விதிவிலக்குகள்[6] ஏற்படுத்த கட்டுப்பாடுகள் வகை

---

[5] குரியன் ஜே. (பதி) 2005. *பொறுப்பார்ந்த மீன் வர்த்தகம் மற்றும் உணவுப்பாதுகாப்பு*. உவேஅ மீன்வள தொழில் நுட்ப கட்டுரை எண். 456.

[6] உவநிறுவனத்தின் கட்டண விகிதம் மற்றும் வர்த்தகம் மீதான பெபதுவான ஒப்பந்தம் (கவபொஒ 1994) கட்டுரை 20

செய்யும். கட்டுரை 20 கூறுவதாவது "*ஒரே மாதிரியான நிலை உள்ள நாடுகளுக்கு இடையே தன்னிச்சையான அல்லது நியாயமற்ற பாரபட்சத்தை ஏற்படுத்தும் வகையில் அத்தகைய முறைகள் பயன்படுத்தப்படாத நிலையில் அல்லது பன்னாட்டு வர்த்தகத்தில் மறைக்கப்பட்ட கட்டுப்பாடு உள்ள நிலையில் தேவைக்கு ஏற்றவாறு, இந்த ஒப்பந்தத்தில் எந்த ஒப்பந்தக்குழுவும் பின் பற்றுதலை அல்லது செயல்படுத்துவதைத் தடுப்பதற்கு குறையாத இயற்கை ஆதாரங்களின் பாதுகாப்பு தொடர்பான முறைகளை அத்தகைய முறைகள் உள்ளூர் உற்பத்தி அல்லது நுகர்வு மீதான தடைகள் தொடர்பாக திறமையானதாக ஆக்கப்படும் தருணத்தில் விளக்கம் வழங்குவதற்கு ஏதும் இல்லை*".

8. பன்னாட்டு வர்த்தகத்தில் மீன் பொருட்கள் சட்டப்படியான மீன்பிடிப்பு நடவடிக்கைகள் மூலமாக பிடிக்கப்பட்டதா மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் மீன்வளம் குன்றாத வகையில் பெறப்பட்டதா என்பதனை சரிபார்க்க அதிகரித்து வரும் கோரிக்கைகளை நாடுகள் கணக்கில் கொள்ள வேண்டும். [7]

9. இத்தகைய போக்கு மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் (மமீவமேநி) மற்றும் தன்னார்வ சூழல் அடையாளம் வழங்கும் திட்டங்கள் ஆகியவற்றால் மேம்படுத்தப்படும் மீன்பிடிப்பை ஆவணப்படுத்துதல் மற்றும் வர்த்தக சான்றிடுதல் திட்டங்களை உள்ளடக்கும். மமீவமே நிறுவனங்களால் மேம்படுத்தப்பட்ட மீன்பிடிப்பை ஆவணப்படுத்துதல் மற்றும் வர்த்தக சான்றிடுதல் போன்ற திட்டங்களை உரிய கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் தனியார் பிரிவு இணைந்து செயல்படுதலை ஊக்குவித்தல் ஆகியவற்றைப் பின்பற்றி மேம்படுத்தவும் செயல்படுத்தவும் நாடுகள் தீவிரமாக ஒத்துழைக்க வேண்டும்.

10. சூழல் அடையாளமிடுதல் மீன் மற்றும் மீன் பொருள் உற்பத்தியாளர்களுக்கு தங்களுடைய பொருட்களை வேறுபடுத்திக் காட்ட வாய்ப்பை வழங்குகிறது. சரியாக வடிவமைத்து மற்றும் செயல்படுத்தினால் வளம்குன்றாத மீன்வளத்தின் மீது சூழல் அடையாளமிடுதல் நன்மை பயக்கும் விளைவுகளை ஏற்படுத்தும். எனினும் வர்த்தகத்திற்கு தடை ஏற்படுத்தும் வாய்ப்புகளும் அவற்றிற்கு உண்டு. நியாய மற்ற முறையில் வளம்குன்றாத வகையில் அறுவடை செய்யப்பட்ட சூழல் அடையாளமிடப்படாத பொருட்களை வேறுபடுத்தும். சூழல் அடையாளம் இன்மையால் அந்த மீன் வளம்குன்றாத வகையில் அறுவடை செய்யப்படவில்லை என்று கொள்ளுதல் கூடாது. நாடுகள் மற்றும் அடையாளமிடும் திட்டத்தின் ஆதரவாளர்கள் கடல்சார் மீன்பிடிபாட்டிலிருந்து பெறப்படும் மீன் மற்றும் மீன் பொருட்களை அடையாளம் இடுதலுக்காக[8] உவே அமைப்பின் வழிகாட்டு முறைகளை குறிப்பில் கொள்ள வேண்டும். நன்கு நிர்வகிக்கப்படும் கடல்சார் மீன்பிடிபாட்டிலிருந்து பெறப்படும் பொருட்களுக்கு அடையாளச்சீட்டு இடுதலை மேம்படுத்துதல் மற்றும் சான்றிடுதல் ஆகியவற்றிற்காக வடிவமைக்கப்பட்ட சூழல் அடையாளம் இடும் திட்டங்களுக்கு இந்த வழிகாட்டு முறைகள் பொருந்தும். மீன் வளத்தை வளம் குன்றாத வகையில் பயன் படுத்துவது தொடர்பான பிரச்சினைகளை மையப்படுத்தும்.

11. வளம்குன்றாத வர்த்தகத்தின் மூலம் எல்ல நாடுகளுக்கும் பயன்பெறும் வாய்ப்பு அதே அளவில் இருக்கும் என்பதனை நினைவில் கொண்டு மற்றும் பன்னாட்டு வர்த்தகத்தில் அவற்றின் முக்கியமான பங்களிப்பு வளரும் நாடுகள் மற்றும் மாறும் நிலையில் உள்ள நாடுகள் ஆகியவற்றிற்கு பொருந்த கூடிய சிறப்பான காரணங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வளரும் நாடுகள், தொடர்புடைய நிறுவனங்கள் குறிப்பாக உவேஅ ஆகியவை வளரும் நாடுகள் மற்றும் மாறும் நிலையில் உள்ள நாடுகளுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி வழங்க வேண்டும். அத்தகைய தொழில் நுட்ப உதவி மற்றும் நிதிஉதவி, மீன்வள மேலாண்மையை

---

[7] பொமீவநவி தொகுப்பின் கட்டுரை 9 நீர்வாழ் உயிரின வளர்ப்பு மேம்பாடு கொள்கைகள் பார்க்கவும்

[8] உவேஅ. 2005. கடல்சார் மீன்பிடிபாட்டிலிருந்து பெறப்படும் மீன் மற்றும் மீன்பொருட்களுக்கு சூழல் அடையாளம் இடுவதற்கான வழிகாட்டு முறைகள்.

மேம்படுத்துதல், மீன்பிடிபாட்டை ஆவணப்படுத்துதலை செயல்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் வர்த்தக சான்றிடுதல் மற்றும் சூழல் அடையாளமிடும் திட்டங்கள் போன்றவற்றில் திறனை மேம்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும்.

12. கடல்சார் மீன்பிடிபாட்டிலிருந்து பெறப்படும் மீன் மற்றும் மீன் பொருட்களுக்கு சூழல் அடையாளம் இடுதலுக்கான உவே அமைப்பின் வழிகாட்டு முறைகளுக்கு இணக்கமாக தங்கள் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் நாடுகள் வளம்குன்றாத மீன் வளம் குறித்த திட்டங்களில் சூழல் அடையாளம் இடுதலை ஊக்குவிக்க வேண்டும்.

13. வளம்குன்றாத மீன்வள மேம்பாடு மற்றும் மீன் வள ஆதாரங்களை பொறுப்பார்ந்த முறையில் பயன்படுத்துதல் ஆகியவற்றில் விட்டுக்கொடுக்கும் வர்த்தக தொடர்பான முறைகளைத் தவிர்க்க நாடுகள் தொடர்புள்ள மமீவமேநிறுவனத்தின் மூலமாக ஒத்துழைக்க வேண்டும். வர்த்தக தொடர்பு முறைகள் மீன்வளத்தின் வளம் குன்றாத வளர்ச்சி மற்றும் ஆதாரங்களின் பொறுப்பார்ந்த பயன்பாடு ஆகியவற்றிற்கு இணக்கமாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும். உவ நிறுவன ஒப்பந்தங்களுக்கு இணக்கமாக இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

14. உவநிறுவ ஒப்பந்தங்களில் நிறுவப்பட்டுள்ள கடமைகள், உரிமைகள், கொள்கைகள் உள்ளிட்ட பன்னாட்டு சட்டத்திற்கு இணக்கமாக வர்த்தக தொடர்பான முறைகள் மீன்வளத்தின் வளம்குன்றாத தன்மையை மேம்படுத்துவதற்காக பின் பற்றப்பட்டு செயல்படுத்தப்படவேண்டும். அம்முறைகளும் ஆர்வமுள்ள நாடுகளுடன் முன்னதாக கலந்துரையாடப்பட்ட பின்பே பயன்படுத்தப்பட வேண்டும். ஒரு தலையான வர்த்தக தொடர்பான முறைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

**11.2.3 நாடுகள் மீன் மற்றும் மீன் துணைப்பொருட்களின் வணிகத்தைப் பாதிக்கும் செயல்பாடுகள் அனைவரும் அறியத்தக்க வகையில் தெளிவாகவும், அறிவியல் முறையில் பொருத்தமான சரியான அழுத்தமுள்ளதாகவும், பன்னாட்டு விதிமுறைகளுக்கு உட்பட்டும் உள்ளது என்பதற்கு உறுதி தர வேண்டும்.**

15. நாடுகள் தொழில்நுட்ப கட்டுப்பாடுகள், வரையறைகள் மற்றும் முறைகள் உள்ளிட்ட மீன் மற்றும் மீன் பொருட்களின் பன்னாட்டு வர்த்தகத்தைப் பாதிக்கும் பிற நாடுகளின் முறைகளைப் பற்றி சரியான நேரத்தில் தெரிவிக்க வேண்டும். பொருந்தும் நேரத்தில் அவை விசாரணை விபரத்தை நிறுவ வேண்டும். உவநிறுவன ஒப்பந்தங்களுக்கு இணக்கமாக ஆர்வமுள்ள நாடுகளில் இருந்து கருத்துக்களுக்காக போதிய கால அவகாசம் வழங்க வேண்டும்.

**11.2.4 மனிதனின் அல்லது விலங்கின் உயிரையும், உடல் நலத்தையும் பாதுகாக்கவும் நுகர்வோரின் நலனை அல்லது சுற்றுச்சூழலின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு நாடுகள் கடைப்பிடிக்கும் மீன் வணிக முறைகள் ஒருபாற்சார்புடையதாக இருக்கக்கூடாது. அவை பன்னாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வணிக விதிகளுக்கு, குறிப்பாகச் சுகாதார முறைகளைச் செயல்படுத்தும் ஒப்பந்தம் மற்றும் உலக வணிக நிறுவனத்தின் வணிகத்தில் தொழில்நுட்பத் தடைகள் குறித்தான ஒப்பந்தத்தின் கோட்பாடு, உரிமை மற்றும், கடமைகளை உள்ளடக்கியிருக்க வேண்டும்.**

16. மனிதனின் அல்லது விலங்கின் உயிரையும் உடல் நலத்தையும் அல்லது சுற்றுச்சூழலைப்பாதுகாக்க அல்லது இந்த முறைகள் பாதுகாப்பு அல்லது மீன்வள ஆதாரங்கள் தொடர்பாக தேவை எனில் உவநிறுவன ஒப்பந்தங்களின் கீழ் நாடுகள் மீன் மற்றும் மீன் பொருட்களுக்கான வர்த்தக தொடர்பான முறைகளை நாடுகள் பின்பற்றலாம். எனினும், நாடுகள், இந்த முறைகள் ‘‘தன்னிச்சையான அல்லது நியாமற்ற முறையில் ஒரே நிலையில் உள்ள

நாடுகளுக்கு இடையில் பாரபட்சத்தைத் தோற்றுவித்தலில் முடிதல் கூடாது. பன்னாட்டு வர்த்தகத்தில் போலியான தடையை ஏற்படுத்தக்கூடாது.''[9]

17. உணவுப்பாதுகாப்பு மற்றும் தன்மைக்கான அங்கீகரிக்கப்பட்ட பன்னாட்டு வரையறைகளை ஏற்படுத்தும் அமைப்பு உவேஅ/ உசுநி/ கொடக்ஸ் அலிமண்டேரியஸ் கமிஷன் (சிஏசி) ஆகியவை ஆகும். விலங்கினங்களின் நலத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு விலங்குகளின் உடல் நலத்திற்கான உலக நிறுவனம் (விஉஉநி) ஆகும். இதன் விளைவாக, குறைந்த அளவிலேனும் மீன் பாதுகாப்பு மற்றும் தன்மைக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட கொடக்ஸ் அலிமண்டேரியஸ் கமிஷன் (சிஏசி) வரையறைகளையும் மற்றும் உயிர் மீன் வர்த்தகத்திற்கு விஉஉநிறுவன வரையறைகளையும் பின்பற்ற வேண்டும். நாடுகள் விறுவிறுப்புடன் பங்கு கொண்டு பங்குபெறுதலை எளிதாக்க வேண்டும். பொருந்தியவாறுவளரும் நாடுகள்[10]கொடக்ஸ் அலிமண்டேரியஸ் கமிஷன் (சிஏசி) மீன் மற்றும் மீன் பொருட்களின் மீதான கொடக்ஸ் குழு மற்றும் கால்நடை மருந்துகள், உணவில் சேர்க்கக் கூடியவை, அடையாளமிடுதல், உணவுதூய்மை மேம்படுத்தப்பட்ட வரையறைகள் சிஏசி உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் நோக்கங்களுக்கு ஏற்ப உள்ளதா என்பதனை உறுதி செய்திட மாதிரிகள் சேகரித்து ஆய்வு செய்தல் போன்ற பன்னாட்டு மீன் வர்த்தகம் தொடர்பான பணிகளில் பங்கு பெறுதலை எளிதாக்க வேண்டும்.

18. சுகாதாரம் மற்றும் தாவரம் சார்ந்த சுகாதாரம் பற்றிய உடன்படிக்கை (சுதாசாசுஉ) மற்றும் வர்த்தகத்தில் தொழில் நுட்ப தடங்கல் மீதான உடன் படிக்கை (வதொத) ஆகிய இரண்டிற்கும் பிற உறுப்பினர்களிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு தங்கள் தொழில் நுட்ப தேவைகள் தேசீய அளவில் நடத்துதலை வழங்குதல் வேண்டும் என்பதை உறுப்பினர்கள் உறுதி செய்தல் வேண்டும். எனினும், அசாதாரணமான சூழ்நிலைகளில் விஞ்ஞான பூர்வமான தத்துவம் மற்றும் காரணங்கள் உள்ளிட்ட நோக்க தத்துவத்தின் அடிப்படையில் வேறுபட்டவாறு நடத்துதல் நியாயப்படுத்தப்படுவதை ஒப்பந்தங்கள் உணர்கின்றன.

19. சுதாசாசு உடன் படிக்கைகள் முறைகள் நோக்க மதிப்பீட்டின் அடிப்படையில் அமைதல் வேண்டும். உரியவாறு சூழ்நிலைக்கு ஏற்ப, மனிதன், விலங்கு, தாவரம் ஆகியவற்றின் உயிர் மற்றம் உடல் நலத்திற்கு ஏற்படும் இடர்களுக்கு ஏற்ப அமைதல் வேண்டும் தொடர்புடைய பொருளாதார காரணிகளையும் கணக்கில் கொள்ள வேண்டும். உரிய பாதுகாப்பு நிலைகளைத் தீர்மானிக்கும் பொழுது உறுப்பினர்கள் பாதகமான வர்த்தக விளைவுகளைக் குறைக்கும் நோக்கத்தை கணக்கில் கொள்ள வேண்டும்.

20. இயலும் இடங்களில் நாடுகள் இந்த முறைகளை பொருத்தமாக இருக்கச் செய்தல் வேண்டும். இந்த முறைகள் நோக்கத்தில் மதிப்பிடப்பட்டதற்கு சமமான முறையில் விளைவுகளை ஏற்படுத்தியுள்ள இடங்களில் அவர்களுடையதிலிருந்து முறைகள் வேறுபட்டவை என்பதனை உணர வேண்டும்.

21. அனைத்து தொழில்நுட்ப வரையறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் சட்டத்திற்குட்பட்ட நோக்கங்களைக் கொண்டிருக்க வேண்டும். இந்த தொழில் நுட்ப வரையறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை செயல்படுத்துவதின் விளைவு அல்லது விலை அவற்றின் நோக்கங்களுக்கு ஏற்ற அளவில் இருப்பதை நாடுகள்உறுதி செய்ய வேண்டும். இதே நோக்கத்தை நிறைவேற்ற இரண்டு அல்லது அதற்கு மேலாக வழிகள் இருப்பின், மிகக்குறைந்த வர்த்தக கட்டுப்பாடு உள்ளதையே மாற்றாகக் கொள்ள வேண்டும்.

---

[9] உவநி கவபொஒ 1994 கட்டுரை 20.

[10] சிஏசி அறக்கட்டளை நிதி வளரும் நாடுகள் பங்கு பெறுதலை எளிதாக்குகிறது.

**11.2.5 நாடுகள் மீன் மற்றும் மீன் துணைப்பொருட்கள் வணிகத்தை நடத்துவதற்கான முறைகளைச் சிறந்த முறையில் தளர்த்த வேண்டும். உலக வணிக நிறுவனத்தின் ஒப்பந்தத்திற்கு ஏற்ற வகையில் இவ்வணிகத்திற்கு ஏற்படும் தடைகளை நீக்குவதுடன், இவ்வணிகம் நாடுகளின் கடமைகள், பங்குவீதம் மற்றும் வரி விலக்கு போன்ற நடைமுறைக் கொள்கைகளுக்கு ஏற்றவாறு இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.**

22. மீன் மற்றும் மீன் பொருட்கள் (இயற்கையானமீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆகிய இரண்டிலும் இருந்து பெறப்படும்) வர்த்தகத்திற்கு வரி மற்றும் வரியின்மை முறைகள் உள்ளிட்ட தடைகள் நாடுகளுக்கு அவற்றின் ஒப்பிடக் கூடிய பயன்களில் இருந்து அவற்றின் நலம் மற்றும் பயன் ஆகியவற்றிற்கான நுகர்வோருக்கு மீன் மற்றும் மீன் பொருட்களின் விலையை அதிகரிக்கச் செய்யும்.

23. உற்பத்தி முறையில் புறத்தோற்றங்களுடன் மீன் வரையறுக்கப்பட்ட அளவில் புதுப்பிக்கக் கூடிய ஆதாரம் என்பதால் கூடுதலான சந்தை தாராள மயமாக்குதலால் பயன்கள் வளம்குன்றாத அளவில் பயன்படுத்துவதற்கு அதன் இடத்தில் ஆதாரங்கள் இருக்க அனுமதிக்கும் மீன்வள மேலாண்மை உள்ள இடங்களில் மட்டுமே ஏற்படும் மீன்வளப் பிரிவிலிருந்து சங்கங்கள் பெரிதான பயன்களைப் பெற்று நிலை நிறுத்துவதை உறுதி செய்ய நாடுகள் சந்தை தாராள மயமாக்குதல் மற்றும் அதே சமயத்தில் மீன்வள மேலாண்மையில் முன்னேற்றம் ஆகியவற்றைத் தேடுகின்றன.

24. சந்தையை தாராளமயமாக்குதலின் பகுதியாக நாடுகள் வர்த்தகம் மற்றம் உற்பத்தியை மாற்றும் மான்யங்களைத் தவிர்ப்பதை விரும்புகின்றன. அதுவும் குறிப்பாக மீன்வளத்தின் வளம்குன்றாத மேம்பாட்டிற்கும் மற்றும் மீன் பொருட்களின் பொறுப்பார்ந்த பயன்பாட்டிற்கும் இணக்கமாக இல்லாதவற்றைத் தவிர்க்க விரும்புகின்றன. அதிக திறன், அளவுக்கு அதிகமான மீன்பிடிப்பு, மற்றும் சட்டத்திற்குப் புறம்பான அறிவிக்கப்படாத கட்டுப்பாடற்ற மீன் பிடிப்பு ஆகியவற்றிற்கான மான்யங்களைத் தவிர்க்க விரும்புகின்றன (சஅக)[11].

**11.2.6 நாடுகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ தேவையற்ற முறையில், வணிகத்திற்கு மறைமுகத் தடைகளை உண்டாக்குவதன் மூலம் வணிகர்கள் துய்ப்போரின் விருப்ப உரிமை, விரைவில் அங்காடி சென்றடைவதற்கு தடையூறு எழா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.**

25. வரியின்மை முறைகளால் வர்த்தகத்திற்கு உற்பத்தி பொருட்களுக்கான தேவைகள் மற்றும், மதிப்பீட்டிற்கு இணக்கமாக இருத்தல், சிப்பமிடுதல், அடையாள முத்திரைச் சீட்டு இடுதல் போன்ற தொழில்நுட்ப முறைகள் உள்ளிட்ட பலவழி வகைகளில் பாதிப்புகள் தோன்றும். சட்டத்திற்கு உட்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தேவையானவற்றை விட சுகாதாரம் மற்றும் தொழில்நுட்ப முறைகள் மிகுந்த அளவில் வர்த்தகத்திற்கு தடை ஏற்படுத்தாது. இவற்றிற்கு இடையில் மனிதநலம் மற்றும் பாதுகாப்பு, விலங்கு அல்லது தாவரத்தின் உயிர் அல்லது நலம், சுற்றுப்புறம் அல்லது நுகர்வோரை மோசடி முறைகளிலிருந்து பாதுகாத்தல் ஆகியவையே சட்டத்திற்குட்பட்ட நோக்கங்கள் ஆகும்.

---

[11] 2001 உவநி அமைச்சக அறிவிக்கை (www.wto.org/english/thewto_e/minist_e/min01_e/mindecl_e.htm#technology) paragraph 28 and 2002 Plan of Implementation of the World Summit on Sustainable Development (www.un.org/esa/sustdev/documents/ WSSD_POI_PD/English/WSSD_PlanImpl.pdf) Art 31 f).

**26.** கண்டுபிடித்தல், ஆவணப்படுத்துதல், வங்கி கணக்கு மற்றும் நிதி ஆகியவற்றிற்கான தேவைகளை பிற சந்தை அணுகும் நிலைகள் உள்ளடக்கும். சந்தை அணுகும் நிலைகள் தேசீய மற்றும் பன்னாட்டு பாதுகாப்பு பற்றி குறிப்பாக பயங்காரவாத இடங்களின் நோக்கில் அக்கறையை பிரதிபலிக்கிறது. சந்தை அணுகுதலுக்குள்ள நிபந்தனையால் வர்த்தகத்திற்கு ஏற்படக்கூடிய வலை மற்றும் பாதிப்புகள் பற்றி உணர்வு கொள்ளுதல் நாடுகளுக்குத் தேவையாகிறது.

**27.** உவநிறுவன ஒப்பந்தங்கள் நிச்சயமான சூழ்நிலைகளில்அசாதாரணமான முறைகளை செயல்படுத்த உறுப்பினர்களுக்கு உரிமை வழங்குகிறது. நாடுகள்வர்த்தகத்தைப்பாதிக்கும் முறைகள் உவ நிறுவனத்தின் கொள்கைகளை நடத்துதல் மற்றும் பெவி நாடுகள் ஆகியவற்றைப் பலவீனப்படுத்தாது என்பதனை உறுதி செய்ய வேண்டும்.

**28.** மீன் மற்றும் மீன் பொருட்களின் பன்னாட்டு வர்த்தகத்திற்கு இரகசியமான அல்லது அறிவிக்கப்படாத தடைகளைத் தவிர்க்க வேண்டும். உவநிறுவன ஒப்பந்தத்தின் அடிப்படை கொள்கைகளுக்கான விதி விலக்குகளைத் தவறாகப் பயன்படுத்துவதையும் தவிர்க்க வேண்டும்.

**11.2.7 நாடுகள், விற்பனையாளர்களுக்கும், அவர்கள் மீன்வளங்களை அணுகுவதற்கும் நிபந்தனைகள் விதிக்கக்கூடாது. மேலும் இந்த கொள்கையானது மற்றும் மீன்பிடி நாடுகளுக்கிடையேயான மீன்பிடி ஒப்பந்தம், இயற்கை வளங்களை ஏற்றுக்கொள்ளுதல், வணிகம் மற்றும் சந்தை, தொழில்நுட்பப் பரிமாற்றம், பயிற்சி, அறிவியல் ஆராய்ச்சி மற்றும் இவை தொடர்பான பிற இலக்குகளுக்கும் விலக்களிப்பதல்ல.**

**29.** உலக மயமாக்கலால், சந்தைக்கு அணுகும் தன்மை மற்றும் ஆதாரங்களை அணுகுதல் விரிவடைந்து வருகிறது. பணியில் வர்த்தகத்தை உள்ளடக்கவும் (உதாரணமாக வாகனத்தை வாடகைக்கு அமர்த்துதல் அல்லது பிற சேவைகள்) மற்றும் முதலீடு (மீன்பிடிப்பு ஒதுக்கீட்டை விற்பனை செய்தல் மற்றும் இணைந்த முயற்சிகள் உள்ளிட்ட) மற்றும் முதலீட்டுடன் தொடர்புடைய அறிவுசார் சொத்துக்கள் ஆகியவற்றை உள்ளடக்கவும் விரிவடைகிறது. அத்தகைய வர்த்தகத்திற்கு நாடுகள் பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பின் (பொமீவநவிதொ) கொள்கைகளைப் பயன்படுத்த வேண்டும்.

**30.** சந்தையை அணுகுதல் மற்றும் மீன்வளத்தை அணுகுதல் ஆகியவற்றிற்கு, வெளிப்படையான முறையில் உவநிறுவன கொள்கைகள் மற்றும் ஐநாகச சம்பிரதாயங்களின் தொடர்புடைய கட்டுரைகள் ஆகியவற்றிற்கு இணங்கி அவர்களுடைய தனியான தகுதி முறைகள் குறித்து பேரம் பேசப்படுதல் வேண்டும். தொலைதூர நீரில் மீன்பிடிக்கும் நாடுகள் கடலோர நாடுகளின் தனிப்பட்ட பொருளாதார மண்டல ஆதாரங்களை (தபொம) அணுக, மீன்வளத்தை அணுகுவதில் வெற்றி கிடைக்கவில்லை என்றால், சந்தைக்கான அணுகுதலை நிறுத்தி வைக்கக் கூடாது. தபொ மண்டத்தில் உள்ள உயிரின ஆதாரங்களை எவ்வாறு பயன்படுத்துவது[12] என்பதனைத் தீர்மானிக்கும் தனிப்பட்ட உரிமை கடலோர நாடுகளுக்கு உள்ளது. கடலோர நாட்டின் சொந்த மீன்பிடிப்பு திறனைத் தீர்மானிப்பதும் இதில் அடங்கும். இந்நிலையில் ஐநா கச சம்பிரதாயங்களின் பகுதிகளுக்கு இணங்க அனுமதிக்கப்படும் மீன்பிடிபாட்டில் மிகையாக உள்ளதை அணுகுவதற்கு பிற நாடுகளை அனுமதிப்பதும் இதில் அடங்கும். தபொ மண்டலத்தில் கடலோர நாடு, உயிருள்ள மற்றும் உயிரற்ற இயற்கை ஆதாரங்களை ஆராய, பயன்படுத்த பாதுகாக்க மற்றும் நிர்வகிக்க ஏகாதிபத்ய உரிமைகளைப் பெற்றுள்ளது.

---

[12] ஐநாகசச கட்டுரை 61 மற்றும் 62

31. மீன்பிடிப்போர், மீன்பிடி கலன்கள் மற்றும் சாதனங்கள் ஆகியவற்றிற்கு உரிமம் வழங்குவதின் பகுதியாக கட்டணம் செலுத்துதல் மற்றும் பிற வகையான வெகுமதிகளைச் செலுத்துதல் கடலோர நாடுகளுக்குத் தேவையாகிறது.[13,14,15]

32. பேச்சு வார்த்தைகளில் வெளிப்படைத் தன்மை மற்றும் அணுகுதலுக்கான கட்டண அளவு உட்பட ஒப்பந்த முறைகளுக்கு இணக்கமாக, மீன்வளத்தை அணுகுவதற்கான ஒப்பந்தங்கள் மற்றும் தொடர்புடைய சேவைகள் கலந்து பேசப்பட்டதை நாடுகள் உறுதி செய்ய வேண்டும்.

**11.2.8 நாடுகள் குறிப்பிட்ட தொழில் நுட்பத்திறனை வாங்குவதற்கும் அல்லது பிற உற்பத்திப் பொருட்களை விற்பதற்கும் சந்தைத் தொடர்பை ஏற்படுத்தக்கூடாது.**

33. மீன்வளப்பிரிவில் வர்த்தகம் என்பது வரிசையான பொருட்கள் மற்றும் சேவை அவ்வாறே மீன்பிடிப்பு ஒதுக்கீட்டில் வர்த்தகம், மீன்பிடிப்பிற்கு உரிமங்கள், அனுமதி, இணைந்த முயற்சிகள் மற்றும் தொடர்புடையவற்றை உள்ளடக்கும் இரண்டு வழிகளில் இரு நிறுவனங்களுக்கு இடையில் அல்லது ஒரே நிறுவனத்திற்குள் பாரம்பரிய எல்லை கடந்த வர்த்தகம் நடைபெறும்.

34. குறிப்பிட்ட தொழில் நுட்பத்தை விலைக்கு வாங்குதல், தனிப்பட்ட சேவையின் பகுதியை வாங்குதல் அல்லது பிற பொருட்களை விற்பனை செய்தல் போன்றவற்றிற்கான சந்தைக்கு அணுகுவதற்கு நாடுகள் நிபந்தனையிடுதல் கூடாது. இது நாட்டிற்கு சொந்தமான நிறுவனங்களுக்கும் சமமாகப் பொருந்தும். பெ விநா மற்றும் தேசீய அளவில் நடத்துதலுக்கான கொள்கைகளுக்கு[16] உவநி உறுப்பினர்களின் கட்டுப்படுதலுக்கு இணங்க பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட வேண்டும். இதே கொள்கைகள் மீன்பிடிபாடு மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு தொடர்பான மேம்பாட்டிற்கு உதவி செய்வதற்கும் பொருந்தும்.

35. ஆபத்தில் உள்ள சிற்றின வகைகளின் குறிப்பாக இயற்கையான விலங்கு மற்றும் தாவர வகைகளில் ஆபத்தில் உள்ள உயிரினங்களின் பன்னாட்டு வர்த்தக மரபில் (ஆஉபவம) பின் பற்றப்படும் சிற்றின வகைகளின் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்த முறைகளை மேம்படுத்துதல், செயல்படுத்துதல் மற்றும் நடைமுறைக்கு கொண்டு வருதல் ஆகியவற்றில் நாடுகள் முழுவதுமாக பங்கு கொண்டு ஒத்துழைக்க வேண்டும்.

36. சிற்றின வகை அளவில் அழியும் நிலையில் உள்ள சிற்றின வகைகள் அல்லது அந்த உயிரின வகைகளின் பன்னாட்டு வர்த்தகத்தால் அந்நிலைக்கு தள்ளப்பட்ட சிற்றின வகைகள் ஆகியவற்றின் பன்னாட்டு வர்த்தகத்தை ஆஉபவம கட்டுப்படுத்துகிறது ஆஉபவ மரபின் இணைப்புகளில்[17] பல மீன் மற்றும் கிளிஞ்சல் சிற்றின வகைகள் பட்டியல் இடப்பட்டுள்ளன.

37. இரு நிறுவனங்களுக்கு இடையில் உள்ள 2006 புரிந்துணர்வு ஒப்பந்தம் (புஒ) குறித்து ஆஉபவ மரபிற்கு அறிவுரை வழங்குவதற்கு நாடுகள் மற்றும் மமீவமே நிறுவனங்கள் உவே அமைப்புடன் ஒத்துழைக்க வேண்டும்.

---

13 ஐநாகசச கட்டுரை 62, 4 (அ)

14 வளரும் நாடுகளின் கடலோர நாடுகளில் கட்டுரையின் அதே பகுதி அடையாளம் காணும் பிற வகையான வெகுமதிகள் உள்ளடக்குபவை, நிதி அளித்தல், மீன்வள தொழில் தொடர்பான சாதனங்கள் மற்றும் தொழில் நுட்பம் அளித்தல். இதனை நிச்சயமான பட்டியலாகக் கொள்ளுதல் கூடாது. கட்டுரை 62 (4) ஐத் தொடர்ந்து பிற தொடர்புடைய திறனை மேம்படுத்தும் முறைகள் உள்ளன.

15 மீன்வளத்தை அணுகுதலுக்கான ஒப்பந்தங்கள் பரிசீலிக்கத்தக்க மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளது. வெவ்வேறான மன்றங்களில் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

16 நாடுகள் உவநி அமைக்க அறிவிக்கை 2005 குறிப்பை கவனத்தில் கொள்ள வேண்டும். (www.wto.org/english/thewto_e/minist_e/min05_e/final_text_e.htm) regarding Least Developed Countries and Trade Related Investment Measures.

38. நல்ல வளம்குன்றாத மேலாண்மை முறைகளை மேம்படுத்துவதற்கு கூடுதலாக, நாடுகள், வளரும் நாடுகள் திறமையாக பங்கு கொள்வதை எளிதாக்க வேண்டும். ஆபத்திற்குட்பட்ட சிற்றின வகைகளை குறிப்பாக ஆஉபவ மரபில் பின்பற்றப்படுவன வற்றின் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்துவதற்கான முறைகளை மேம்படுத்துவது, செயல்படுத்துவது மற்றும் நடைமுறைக்கு கொண்டு வருதல் ஆகியவற்றில் வளரும் நாடுகள் பங்கு கொள்ள வேண்டும். மமீவமே நிறுவனங்கள் உள்ளிட்ட தொடர்புடைய நிறுவனங்கள் மேம்படுத்திய பிற முறைகளை, உதவி வழங்கி அல்லது திறனை வளர்த்தல் மூலமாக செயல்படுத்துவதில் பங்கு கொள்ள வேண்டும். நாடுகள் தங்களுடைய உள் நாட்டுச் சந்தைகளில் ஆஉபவ மரபிற்கு இணக்கமான முறைகளைப் பின் பற்ற வேண்டும்.

### 11.2.10 நாடுகள், வாழும் உயிரினப் பொருட்களை வணிகம் செய்வதில் உடன்படிக்கைகளை மேம்படுத்தி ஏற்றுமதி அல்லது இறக்குமதி நடைபெறும் நாடுகளில் சுற்றுச்சூழல் அழியாவண்ணம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

39. மனிதர்களின் நுகர்வுக்காகஉள்ள உயிருள்ள நீர்வாழ் உயிரினங்கள், மீன்காட்சி சாலைகளில் பயன்படுத்துவதற்காக உள்ள உயிருள்ள சிற்றினங்கள் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்புக்காக உயிருள்ள சினை மீன்கள் ஆகியவற்றின் வர்த்தகத்தில் ஏற்படும் இடரை நாடுகள் குறிப்பில் கொள்ள வேண்டும்.

40. சுற்றுச்சூழல் இடர் ஒன்றை இந்த வர்த்தகம் ஏற்படுத்தும். சுற்றுப்புறத்திற்குள் அந்த இருப்பிடத்தைச்சாராத சிற்றின வகையை எதிர்பாராது அறிமுகப்படுத்துதல் அல்லது பிற உயிரினங்களை அல்லது சுமந்து செல்லும் மாதிரிகள் மூலம் நோய்களை அறிமுகப்படுத்துதல் ஆகியவை இடர்களாகும். நாடுகள் அத்தகைய வர்த்தகத்தால் ஏற்படுத்தப்படும் இடரை நியாயமான, வெளிப்படையான, பாகுபாடு இல்லாத முறையில் உவநி ஒப்பந்தங்கள்[18] மற்றும் பிற உரிய சட்டங்களுக்கு ஏற்ப மதிப்பிட வேண்டும்.

41. பொருந்தும் இடங்களில், ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில் விலங்கின் உடல் நலத்திற்கு உரிய அக்கறையுடன் உயிருள்ள வகைகள் எடுத்துச் செல்லப்பட்டு சேமிக்கப்படுவதை உறுதி செய்ய கவனம் செலுத்த வேண்டும்.

42. உவநி ஒப்பந்தங்கள், மனிதன், தாவரம் மற்றும் விலங்கினங்களின் உயிர், உடல் நலம் மற்றம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அடிப்படையில் உரிய முறைகளை மேற்கொள்வதற்கு நாடுகளுக்கு உரிமை உள்ளதைத் தெளிவுபடுத்துகிறது. விஉஉ நிறுவனத்தின் வரையறைகள் விலங்கினங்களின் நோய்கன் பரவுவதைத்தடுக்க வடிவமைப்பை வழங்குகிறது. உயிர் மீன்

---

[17] ஆஉபவமரபு உயிரினங்களை மூன்று இணைப்புகளில் அமைக்கிறது. இணைப்பு 1ல், உறுப்பினர்கள் மிகுந்த அளவில் அழியும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொண்ட சிற்றின வகைகள் பட்டியல் இடப்படுகின்றன. இந்த உயிரின வகைகளை இயற்கை வளத்திலிருந்து வர்த்தகம் செய்வது தவிர்க்கப்பட்டுள்ளது. இணைப்பு 2 இயற்கை வள சிற்றின வகைகளை பன்னாட்டு வர்த்தகம் கட்டுப்படுத்தாத வரை, இவை அச்சுறுத்தப்பட்ட சிற்றின வகைகள் என உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்வதை பட்டியல் இடுகிறது. ஆகையால் இணைப்பு 2ல் பட்டியலிடப்பட்டுள்ள சிற்றின வகைகள் குறிப்பிட்ட நிபந்தணைகளில் பொதுவாக அனுமதிக்கப்படுகின்றன. ஆவணப்படுத்துதல், பன்னாட்டு வர்த்தகத்திற்கு அனுமதிக்கப்படும் மொத்த எண்ணிக்கையில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வரையறை போன்றவை நிபந்தனைகளில் அடங்கும். ஆஉபவ மரபு உறுப்பினர்கள் இணைப்பு 3ல் ஒரு தலைப்பட்சமாக பட்டியல் இடுகின்றனர். இதற்கு தேவையானது அனைத்து ஆஉபவ மரபு உறுப்பினர்களும் அத்தகைய சிற்றின வகைகளின் வர்த்தகத்தை ஆவணப்படுத்த வேண்டும். வர்த்தகத்தை ஆஉபவ மரபு செயலகத்திற்கு அறிவிக்க வேண்டும். ஆனால் உலக அளவில் வர்த்தகத்திற்கு வரையறை ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. ஆஉபவமரபு அதன் இணைப்புகளில் வர்த்தக ரீதியில் பயன்படுத்தப்படும் நீர்வாழ் சிற்றின வகைகளைப் பட்டியல் இட, மாற்றி அமைக்கப்பட்ட அளவையைப் பயன்படுத்துகிறது. மாற்றி அமைக்கப்பட்ட அளவை உவே அமைப்புடன் கலந்து பேசி மேம்படுத்தப்பட்டது. மீன் சிற்றின வகைகளை பட்டியல் இடுதலை தெளிவாக தெரிவிக்கிறது.

[18] உவநி சுதாசாசு உடன் படிக்கை.

வர்த்தகத்தில் மீன் நலம் பேண, நாடுகள் விஉஉ நிறுவனத்தின் வரையறைகள், வழிகாட்டு முறைகள் மற்றும் பரிந்துரைகளைப் பயன்படுத்த வேண்டும்.

43. பன்னாட்டு ஒப்பந்தங்களை கலந்து பேசுதல் ஏற்றுமதி இறக்குமதி ஆகியவற்றில் நாடுகள் உயிர் உள்ள சிற்றின வகைகளின் வர்த்தகத்தோடு தொடர்புடைய சுற்றுச்சூழல் இழப்பைக் குறைப்பதற்கு ஒத்துழைக்க வேண்டும். சேதப்படுத்தும் மீன்பிடிப்பு முறைகளைப் தவிர்க்கவும் மற்றும் இழப்பை குறைக்கவும் ஒத்துழைக்க நாடுகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளர்களை ஊக்கு விக்க வேண்டும்.

**11.2.11 நாடுகள், மீன் மற்றும் மீன் துணைப்பொருள் வணிகம் மற்றும் நீர்வாழ் உயிரின வளப்பாதுகாப்பு ஆகியவற்றுக்கான உரிய பன்னாட்டுத் தர நிர்ணயங்களைத் திறம்படச் செயல்படுத்த ஊக்குவித்து ஒத்துழைப்பும் நல்க வேண்டும்.**

44. தற்போதுள்ள பன்னாட்டு அமைப்புகளின் வடிவமைக்குட்பட்டு, நாடுகள் விறுவிறுப்புடன் பங்கு கொண்டு[19] மீன் மற்றும் மீன் பொருட்களின் பொறுப்பார்ந்த வளம்குன்றாத வர்த்தகத்தை மேம்படுத்த பிற நாடுகளை ஊக்குவிக்க வேண்டும்.

45. இந்நிலையில் நாடுகள் மீன் மற்றும் மீன் பொருட்களின் வர்த்தகத்திற்கான பன்னாட்டு வரையறைகளைப்பற்றிக் கொண்டு இருத்தலை மேம்படுத்த வேண்டும். நாடுகள் வர்த்தகத்திற்கு பொருத்தமான பன்னாட்டு வரையறையைப்[20] பின்பற்ற, பயன்படுத்த அல்லது செயல்படுத்த வேண்டும். பொருத்தமான உவநிறுவனத்தின் ஒப்பந்தங்கள் மற்றும் பகுதிகளுக்கு இணக்கமாக வர்த்தக கட்டுப்பாடுகள் இருக்க வேண்டும்.

46. ஆதாரங்களைப் பாதுகாக்கும் நோக்கங்களுக்காக எடுக்கப்படும் வர்த்தக முறைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை உறுதிசெய்வதை நாடுகள் கோருகின்றன அத்தகைய முறைகள் உவ நிறுவனத்தின் உரிமைகள் மற்றும் கடமைகளுக்கு இணக்கமாக இருக்க வேண்டும்.

**11.2.12 நாடுகள், தமது வணிகத்தில் இலாபம் காண அல்லது முதலீட்டில் பலன்பெற நீர்வாழ் உயிரின வள ஆதாரங்களின் வளர்ச்சிக்கேற்ற பாதுகாப்பு முறைகளின் முக்கியத்துவத்தைக் குறைக்கக் கூடாது.**

47. பொறுப்பார்ந்த வளம்குன்றாத மீன் மற்றும் மீன் பொருட்களின் வர்த்தகத்திற்கான ஒரு முன் நிபந்தனை திறமையான உகந்த மீன்வள மேலாண்மை அமைப்பு மற்றும் நீண்டகால உணவுப் பாதுகாப்பிற்கு வழங்கிடும் வளம்குன்றாத ஆதார அடிப்படை ஆகியவையே.

48. வர்த்தகம், சேவை மற்றும் முதலீடு தொடர்பான விதிகள் மற்றும் கொள்கைகளைப் பின்பற்றுதல் உள்ளிட்ட நாடுகளின் பல நடவடிக்கைகள், நாடுகள் மற்றும் தொடர்புடைய மமீவமே நிறுவனங்கள் பின்பற்றும் பாதுகாப்பு முறைகளை பலவீனப்படுத்தும். ஒரு புறம் மீன்வள வர்த்தகம், சேவை மற்றும் முதலீடு ஆகியவற்றை மேம்படுத்துதல் மற்றும் மறுபுறம் உள்ளூர் மற்றும் பன்னாட்டு அளவில் பாதுகாப்பு நோக்கங்கள் மற்றும் நடவடிக்கைகளை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கான நடவடிக்கைகள் மற்றும் ஏற்பாடுகள் ஆகியவற்றிற்கு இடையே கூட்டுப் பொருத்தம் இருப்பதை நாடுகள் உறுதி செய்ய வேண்டும். உரிய பன்னாட்டு அமைப்புகள்

---

19 உவேஅ பொறுப்பார்ந்த மீன் வளத்திற்கான தொழில்நுட்ப வழிகாட்டு முறைகள் கட்டுரை **11.1.3** *பொறுப்பார்ந்த மீன் உபயோகம்* வரையறை அமைக்கும் முறைகள் தொடர்பாக கூடுதலான வழிகாட்டுதலை வழங்குகிறது.

20 சிஏசி, விஉஉநி, உலக சுங்க நிறுவவம் (உசுநி), மமீவமே நிறுவனங்களால் அமைக்கப்பட்ட பன்னாட்டு வரையறைகள் போன்றவை.

நிறுவியபடி இந்த விதிகள் மற்றும் கொள்கைகள் நாட்டின் பன்னாட்டு கடமைகளுக்கு இணக்கமாக இருத்தல் வேண்டும்.

**49.** பன்னாட்டு விதிகளுக்கு இணங்க நீர்வாழ் உயிரின ஆதாரங்களின் மேலாண்மை மற்றும் பாதுகாப்பிற்கு நாடுகள் ஒத்துழைக்க வேண்டும்.

**50.** அனைத்து நாடுகளும் (கடலோர, துறைமுக, கொடி மற்றும் இறக்குமதி செய்யும் நாடுகள் உள்ளிட்ட) ஒத்துழைத்து, சட்டத்திற்குப்புறம்பான மீன்பிடிப்பிலிருந்து பெறப்படும் மீன் மற்றும் மீன் பொருட்களின் வர்த்தகத்தை தடுக்க, நிறுத்த மற்றும் நீக்க சிறப்பான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். சட்டத்திற்குப்புறம்பான மீன்வள நடவடிக்கைகளால் தோன்றும் வர்த்தகம், பொறுப்பார்ந்த வர்த்தகத்தை, ஆதாரங்களை வளம்குன்றாத வகையில் பயன்படுத்துவதை, பொறுப்பார்ந்த இயக்குபவர்களின் நடவடிக்கைகளை பலவீனப்படுத்தும். இறக்குமதி செய்யும் நாடுகள் மற்றும் துறைமுக நாடுகள் ஒரு தலைப்பட்சமாக முறைகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

**51.** வர்த்தகத்தை மேம்படுத்துதல் முதலீடு செய்தல் சேவை மற்றும் மான்யங்களைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் சட்டத்திற்குப் புறம்பான மீன்பிடிப்பிற்கு கொண்டு செல்லாது என்பதை நாடுகள் உறுதி செய்ய வேண்டும். அதிக திறனால் ஏற்படும் சட்டத்திற்குப் புறம்பான மீன்பிடிப்பு நடவடிக்கைகளும் இவற்றுள் அடங்கும். இறக்குமதி, ஏற்றுமதி அல்லது கலன்களை வாடகைக்கு அமர்த்துதல் போன்றவை அதிகத்திறன் அல்லது சட்டத்திற்குப்புறம்பான மீன்பிடிப்பு ஆகியவற்றிற்கு வழி அமைக்காது என்பதனை நாடுகள் உறுதி செய்ய வேண்டும். உரியவாறு மமீவமே நிறுவனங்கள் மூலமாக கொடி நாடுகள், துறைமுக நாடுகள் மற்றும் கடலோர நாடுகள் சட்டத்திற்குப்புறம்பான மீன்பிடிப்பிற்கு உள்ள ஊக்குவிப்பை நீக்குவதற்கு உவநிறுவன ஒப்பந்தத்திற்கு இணக்கமாக வர்த்தக முறைகளை பாகுபாடு இல்லாத முறையில் பயன்படுத்த ஒத்துழைக்க வேண்டும்.

**52.** ஆழ் கடலில் சஅுக மீன்பிடிப்பை தடுக்க நிறுத்த நீக்க மேற்கொள்ளப்படும் முறைகளில் நாடுகள் உதவிட வேண்டும். இதற்கிடையில் கலன்கள் அவற்றின் கொடிகளைப் பறக்கவிடுதலில் உரிய கட்டுப்பாடுகளைப் பயன்படுத்தி மற்றும் வளம் குன்றாத மற்றும் பொறுப்பார்ந்த மீன் வளத்தை உறுதி செய்யும் நோக்கில் பன்னாட்டு சட்டம் மற்றும் உவநிறுவன ஒப்பந்தங்களுக்கு இணக்கமாக பன்னாட்டு வர்த்தகத்தை பாதிக்கும் முறைகளைப் பயன்படுத்துதல் கட்டுப்படுத்துதல் மற்றும் தொடர்புடைய பன்னாட்டு மீன்வள மேலாண்மை அமைப்புகள் மூலம் உதவிடுதல் வேண்டும்.

**11.2.13 நாடுகள், உலக வணிக (WTO) நிறுவன உடன்படிக்கை ஒப்பந்தத்தில் ஏற்கப்பட்டுள்ள கொள்கைகளுக்கும், உரிமைகளுக்கும், கடமைகளுக்கும் ஏற்றவாறு மீன் மற்றும் மீன் வளத்துணைப்பொருள் வணிகத்திற்கென ஏற்றுக்கொள்ளத்தக்க விதிகள் அல்லது தரங்களை உருவாக்குவதில் ஒத்துழைக்க வேண்டும்.**

**53.** பொறுப்பார்ந்த மற்றும் வேறுபாடு அற்ற வர்த்தகத்தை எளித்தாக்க நாடுகள் உவநிறுவன வடிவமைப்பிற்குள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மீன்வள ஆதாரங்களை வளம்குன்றாத வகையில் பயன்படுத்துதல் ஆகியவற்றிற்கான ஒப்பந்தங்கள் போன்ற தொடர்புடைய பிற வடிவமைப்பிற்குள் மீன் வர்த்தகத்திற்கான உரிய விதிகள் மற்றும் வரையறைகளை வடிவமைத்தலில் பங்கு கொண்டு ஒத்துழைக்க வேண்டும்.

**54.** உவநிறுவன வடிவமைப்பிற்குள் பின்பற்றப்படும் பன்னாட்டு விதிகள், வரையறைகள், வழிகாட்டு முறைகள் மற்றும் பரிந்துரைகளுக்கு இணக்கமாக தேசீய முறைகள் இருக்க வேண்டும். மீன் வர்த்தகத்திற்கு மனித நலம் மற்றும் உணவுப்பாதுகாப்பிற்கான கொடக்ஸ்

அலிமண்டேரியஸ் மற்றும் விலங்கினங்கள் நலத்திற்கு விஉஉநி வழங்கும் வரையறை வழிகாட்டு முறைகள் மற்றும் பரிந்துரைகள் குறிப்பாக முக்கியமானவையாகும். கொடக்ஸ் அலிமண் டேரியஸ் மற்றும் விஉஉ நிறுவனங்களின் அளவிற்கு மேலாக உயர்ந்த பாதுகாப்பை நோக்கமாகக் கொண்டு முறைகளை நாடுகள் நிர்வகிக்கும் எனில், அந்த முறைகள் விஞ்ஞான சாட்சியம் மற்றும் உரிய இடர் மதிப்பீடு அடிப்படையில் இருக்க வேண்டும்.

**11.2.14 நாடுகள், ஒவ்வொன்றும் தங்களுக்குள் ஒத்துழைப்பதுடன் தொடர்புடைய மண்டலம் மற்றும் பன்னாட்டு வணிக நிறுவனம் போன்ற பல சார்பு நிறுவனங்களிலும் பன்னாட்டு வணிக நிறுவனம் பங்கேற்றுச் சமத்துவமான, பாகுபாடற்ற மீன் மற்றும் மீன்வளத் துணைப்பொருட்கள் வணிகம் நடக்கவும், உலக நாடுகளால் ஏற்கப்பட்ட மீன்வள பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வேண்டும்.**

55. நாடுகள் உவநி மற்றும் மண்டல மீன்வள மேலாண்மை அமைப்புகள் உள்ளிட்ட பன்னாட்டு அமைப்புகளின் உறுப்பினர் அல்லது பன்னாட்டு மரபுகளுக்கு கட்டுப்படுதலுக்கு அனுமதி அளித்தவை அல்லது கட்டுப்படுதலை ஏற்றுக் கொண்டவை எனில் அவற்றின் விதிகள் மற்றும் தேவைகளுக்கு இணங்கும் கடமையைக் கொண்டவை. தீர்மானங்கள் மேற்கொள்ளும் முறைகளில் விறுவிறுப்புடன் நாடுகள் பங்கு கொள்ள வேண்டும். ஆகையால் அவற்றின் நோக்கங்கள் மற்றும் அவற்றின் உறுப்பினர்களுக்கு ஒப்பந்தங்கள் தொடர்புடையனவாக இருக்கும்.

56. அனைத்து நாடுகளுக்கும் ஒரே மாதிரியான வாய்ப்புகள் இருக்கும் என்பதனை உணர்ந்து நாடுகள், அரசிடை மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் வளரும் நாடுகளுக்கும், மற்றும் மாறுதலில் உள்ள நாடுகள் ஆகியவற்றிற்கு நிதி மற்றும் தொழில் நுட்ப உதவி வழங்க வேண்டும். இவற்றை பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனை மற்றும் விதிமுறைகளுக்கு ஏற்ப நிறுவனத்தின் எல்லாப்பிரிவுகளிலும் விறுவிறுப்புடன் பங்கு கொள்ள குறிப்பாக உரிய முறைகள் மற்றும் வரையறைகளை மேம்படுத்த வழங்க வேண்டும்.

57. நாடுகள் எல்லா நேரங்களிலும் அவைகள் பகுதியாக விளங்கும் பன்னாட்டு மற்றும் மண்டல அமைப்புகள் மற்றும் ஒப்பந்தங்கள் ஆகியவற்றிற்கு இணக்கமாக செயல்பட வேண்டும். ஒருதலைப்பட்சமாக செயல்படுவதைத் தவிர்க்க வேண்டும்.

**11.2.5 நாடுகள் உதவும் அமைப்புகள், பல்நோக்கு வளர்ச்சி நோக்கமுள்ள வங்கிகள், அவற்றுடன் தொடர்புடைய அனைத்துலக அமைப்புகள், தங்களுடைய கொள்கைகளும் பயிற்சிகளும், வளரக்கூடிய அனைத்துலக வணிகம் மற்றும் ஏற்றுமதிப் பொருட்களது சுற்றுச்சூழலைப் பாதிக்காதவைகளாகவும், மனித சுகாதார மேம்பாடு மற்றும் மனிதனின் அன்றாடத் தேவைகளான அனைத்துப் பொருட்களையும் பாதிக்காதவைகளாகவும், தரமான சத்துணவு மிக்கவையாகவும், துய்ப்போரின் தேவைக்கு ஏற்பவும் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.**

58. சில நாடுகள் மற்றும் பகுதிகளில் மீன் மற்றும் மீன் பொருட்கள் விலங்கினப் புரதத்திற்கு முக்கிய ஆதாரமாக உள்ளது. மேலும் மீன் மற்றும் மீன் பொருட்கள் வேலை வாய்ப்பு மற்றும் சமூகத்தை தயார் செய்து நிர்வகிப்பதற்கு முக்கிய அடிப்படையாக அமைகிறது. வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் ஆகிய இரண்டிலும் நிலை இதுவே. ஆனால் சில வளரும் நாடுகளில் குறிப்பான முக்கியத்துவம் பெற்றுள்ளது.

59. மீன் வளப்பிரிவிற்கு பன்மடங்கு நோக்கங்கள் உள்ளன. உதவி வழங்கும் மற்றும் உதவியைப் பெறும் நாடுகள் மீன்வளம் மற்றும் மேம்பாட்டுக் கொள்கைகள் ஆகிய இரண்டிற்கும் கூட்டு பொருத்தம் இருப்பதை இரு கொள்கை பகுதிகளின் திறனை அதிகரிக்கும் நோக்கில் உறுதி செய்ய வேண்டும்.

60. நீர்வாழ் ஆதாரங்களைப் பயன்படுத்துவதில் அதிக நிர்ப்பந்தத்தை சந்தை தாராளமயமாக்குதல் மற்றும் உலக மயமாக்குதல் ஆகியவை ஏற்படுத்துவதால் சவால்களை எதிர்கொள்ளும் நாடுகளுக்கு கவனம் அளிக்க வேண்டும். வழங்கும் மற்றும் பெறும் நாடுகள் முன் எச்சரிக்கை அணுகுமுறையைக் கொண்டு வருதல் தேவையாகிறது. குறிப்பிட்ட திட்டங்களுக்கு மேம்படுத்தும் உதவியைப் பரிசீலிக்கும் பொழுது சூழல் அமைப்பு கருத்துக்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

61. மீன் மற்றும் மீன் பொருட்களின் பன்னாட்டு வர்த்தகம் தொடர்பான தொடங்குதலுக்கு உதவிடும் நாடுகள் மற்றும் பிற நிறுவனங்கள் சுற்றுச்சூழல் மற்றும் சமூக மதிப்பீடுகள் உள்ளிட்ட கொள்கைகள் மற்றும் முறைகளைப் பின்பற்ற வேண்டும். இவை சுற்றுச்சூழல், வாழ்வாதாரம் மற்றும் உணவுப்பாதுகாப்பு ஆகியவை மீது ஏற்படும் சாதகமான விளைவுகளை நியாயமான முறையில் தெரிவிக்க வேண்டும். தொடர்புடைய உரிமைதாரர்களுடன் கலந்துரையாடுதல் இக் கொள்கைகள் மற்றும் முறைகளின் பகுதியாக விளங்க வேண்டும்.

62. இந்நடவடிக்கைகளுக்காக சிறந்த பயிற்சிகளை வரையறைகளை வழிகாட்டு முறைகளை மேம்படுத்த மற்றும் செயல்படுத்த நாடுகள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றவற்றுடன் ஒத்துழைக்க வேண்டும்.[21] சந்தைக்கு அணுகுதல் தொடர்பான மாறிவிடும் நிலை சிறுதர உற்பத்தியாளர்களுக்கு குறிப்பான சவால்களை ஏற்படுத்துகிறது. அவர்கள் அவர்களுடைய உற்பத்தியை ஒழுங்குபடுத்துவவற்கும் மற்றும் சந்தையை அணுகுவதற்கும் திறனை வளர்த்தல் மூலமாக நாடுகள் குறிப்பான கவனத்தை வழங்குதல் வேண்டும்.

**கட்டுரை 11.3 மீன்வர்த்தகம் தொடர்பான சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகள்**

**11.3.1 மீன் மற்றும் மீன் வளத்துணைப்பொருட்கள் வணிகம் பன்னாட்டு மீன் வணிகச் சட்டத்திற்கு ஏற்றவாறு இருக்கும் வண்ணம் நாடுகளின் விதிகள் மற்றும் நிருவாக நடைமுறைகள் அமைய வேண்டும். மேலும் அவை அனைவரும் அறியும் வகையில் தெளிவாகவும், விரிவாகவும் நடைமுறையிலுள்ள மிகச்சிறந்த அறிவியல் ஆதாரத்தின் அடிப்படையிலும் எவ்வளவு எளிமையாக இருக்க முடியுமோ அவ்வாறு இருத்தல் வேண்டும்.**

63. சட்டங்கள், ஒழுங்கு முறைகள், நிர்வாக மற்றும் இயக்க முறைகள் பொதுவாகக் கிடைக்கும்படியாக இருத்தல் வெளிப்படைக்குத் தேவைப்படுகிறது. தொடர்பான முடிவுகள் உடனடியாக புரிந்து கொள்ளும்படியாக இருத்தல் வேண்டும். வெளிப்படை நடப்பதை முன்கூட்டியே அறிவதற்கும் மற்றும் ஊழல் முறைகளை கைவிடவும் தெரிவிக்கும்.

64. சட்டங்கள் மற்றும் கட்டுப்பபாடுகள் அவசியமற்ற தேவைகளையும் மற்றும் மறுபதிவு இரட்டிப்பு பணிகளையும் தவிர்க்க வேண்டும். நாடுகள் தெளிவான மொழியில் விளக்கங்கள் மற்றும் உதாரணங்களுடன் விளக்கங்கள் ஆகியவற்றை வழங்க வேண்டும். உவேஅ பிற பன்னாட்டு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மீன் பொருட்களின் பன்னாட்டு வர்த்தகம் சார்ந்த கட்டுப்பாட்டு வடிவமைப்பு மீது விபரங்களை வழங்குவதன் மூலம் வெளிப்படைத் தன்மையை எளிதாக்க வேண்டும்.

65. தொழில்நுட்ப காரணங்களுக்காக கட்டுப்பாடுகள் மற்றும் நிர்வாக முறைகள் தோன்றியுள்ள இடங்களில் நாடுகள், அவை விஞ்ஞான சாட்சியங்கள் அடிப்படையில் அமைந்தது மற்றும் பன்னாடுகள் ஏற்றுக் கொண்ட விதிகளுக்கு தொடர்புடையவை என்பதை உறுதி செய்ய வேண்டும்.

---

[21] பொஒமேநி மற்றும் உலக வங்கி உதாரணமாக மேம்பாட்டு உதவி தொடர்பான சிறந்த பயிற்சிக்கு வழிகாட்டு முறைகளை மேம்படுத்தி வைத்துள்ளது.

**11.3.2 நாடுகள் தங்களது தேசிய விதிமுறைக்கேற்றவாறு தொழில் துறை நிறுவனங்கள், சுற்றுச்சூழல் தொடர்புடைய அறிஞர்கள் மற்றும் நுகர்வோருடன் கலந்து பேசுவது மற்றும் கலந்தாலோசிப்பதன் மூலம் மீன் மற்றும் மீன்வளத் துணைப் பொருட்களின் வளர்ச்சிக்கும், சட்ட நடைமுறைக்கும் ஏற்ற வகையில் செயல்பட வேண்டும்.**

**66.** உரிமைதாரர்களுடன் கலந்துபேசி சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகள் மேம்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். உரிமைதாரர்கள் இப்பொருளில் சட்டப்படியான ஆர்வமுள்ள அனைவரையும் உள்ளடக்கும். கலந்தாய்வின் நோக்கங்கள் கட்டுப்பாட்டாளர்களை புரிந்து கொண்டு மற்றும் பாதிக்கப்படும் அனைத்து உரிமைதாரர்களின் அக்கறைக்கு தகுதியான ஏற்பாடுகளை செய்வதற்கு உதவும். சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை மேம்படுத்துவதில் அனைத்து உரிமையாளர்களையும் ஈடுபட வைப்பது மேலும் அறிவு புரிந்து கொள்வது மற்றும் ஒழுங்கு அமைப்புகளை ஏற்றுக் கொள்வது ஆகியவற்றிற்கு ஆதரவளிக்கும். தன்னார்வமான இயக்கத்திற்கு ஊக்கப்படுத்தும்.

**11.3.3 நாடுகள் தமது சட்ட விதி முறைகள் மற்றும் நிர்வாக நடைமுறைகள் அனைத்தையும் எளிய முறையில் அமைத்து, மீன் மற்றும் மீன்வளத் துணைப்பொருள்களின் வணிகமானது எந்த ஒரு இன்னலுக்கும் ஆளாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.**

**67.** உரிய பொழுதில் புரிந்து கொள்வதற்கு, பயன்படுத்துவதற்கு மற்றும் செயல்படுத்துவதற்கு எளிதாக நாடுகள் ஒழுங்கு அமைப்புகளை எளிதாக்க வேண்டும். சிக்கலான ஒழுங்கு அமைப்புகள் இணங்குவதற்கு கடினமானவை. வர்த்தகத்தை பின்வாங்கச் செய்யும் சட்டப்படியான வர்த்தகம் மற்றும் இணக்கத்துடன் சமரசம் செய்து கொள்ளும்.

**11.3.4 நாடுகள், புதிதாக அறிமுகப்படுத்த விரும்பும் விதி மாற்றங்களையும், மற்ற நாடுகளுடன் மீன் மற்றும் மீன்வளத் துணைப்பொருள் வணிகமானது பாதிக்கப்படாத வகையில் முன்கூட்டியே தேவையான தகவல்களையும் கால அவகாசத்துடன் பிற உறுப்பு நாடுகளுக்குத் தெரிவிக்க வேண்டும். இதனால் அந்நாடுகளும் உற்பத்தியாளர்களுக்கு உரிய நேரத்தில் தெரிவித்து உரிய நடவடிக்கை மேற்கொண்டு இவற்றைப் பின்பற்றும். இவற்றை நடைமுறைப் படுத்துவதற்கும் ஆலோசிப்பதற்கும் சிறுது காலம் அவர்களுக்கு அவகாசம் கொடுக்கலாம். இதே போன்று வளரும் நாடுகளுக்கும் இவற்றைப் பின்பற்ற தற்காலிக விதிவிலக்கு அவகாசம் அளிக்கலாம்.**

**68.** தொழில்நுட்பம் அல்லது உணவுப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் போன்ற சட்டப்படியான தேவைகளில் மாற்றம் செய்திட முறைகள் நாடுகளுக்கு உள்ளன. அவை சரியான காலக்கெடு முறைக்கு இணங்கபட வேண்டும். இம்முறைகளில் பிற நாடுகளுக்கு அறிவிக்கை அனுப்பப்பட வேண்டும். சுதாசாசு மற்றும் வதொத போன்ற ஒப்பந்தங்களில் விளக்கப்பட்டுள்ள முறைகள் மூலமாக அனுப்பப்பட வேண்டும்.

**69.** வளரும் நாடுகளுக்கு தொடர்புள்ள மீன் மற்றும் மீன் பொருட்களின் வர்த்தகத்தை மாற்றங்கள் பாதிப்பு ஏற்படுத்தும் பொழுது அந்த நாடுகள் இணங்க அவற்றின் திறனுக்கு உரிய அக்கறை வழங்க வேண்டும். உரியவாறு வளையும் தன்மை தேவைப்படுகிறது. நேருக்கு நேர் தேவையான மாற்றங்களை செயல்படுத்த வளரும் நாடுகளுக்குத் திறமை தேவைப்படுகிறது. தேவைப்படும் இடங்களில் தேவைப்படும் மாற்றங்கள் செயல்படுத்துவதை விரைவுபடுத்தவும் மற்றும் சந்திக்கவும் செயல் திறன் மேம்படுத்தப்படும்.

**11.3.5 நாடுகள், மாறுபடும் சூழ்நிலைக்கு ஏற்பப் பன்னாட்டு மீன் மற்றும் மீன்வளத் துணைப்பொருட்களின் வணிகச் சட்டம் மற்றும் நடைமுறை விதிகள் அவை அறிமுகப்படுத்தப்பட்ட கால கட்டத்திலிருந்து சரியாகப் பொருந்துகின்றனவா என கவனித்து கால இடைவெளிக்கு ஏற்றாற்போல மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்.**

70. சட்டம் மற்றும் ஒழுங்கமைப்புகளையும் மற்றும் அவை எவ்வகைகளில் நிர்வகிக்கப்படுகின்றன என்பதனைப் பற்றியும் நாடுகள் காலம் தவறாது மதிப்பீடு செய்ய வேண்டும். மீன் மற்றும் மீன் பொருட்களின் வர்த்தகத்திற்கு பயன்படுத்தக் கூடிய சட்ட முறைகள் மற்றும் ஒழுங்கு அமைப்புகள் அவசியமானவை மற்றும் திறமையானவை என்பதனை உறுதி செய்திட தொடர்ந்து அவசியம் ஏற்பட்டுள்ளது. சட்டங்கள் மற்றும் ஒழுங்கு அமைப்புகள் திறமையுடனும் சிக்கனத்துடனும் செயல்படுத்தப்படுவதை நாடுகள் உறுதி செய்திட வேண்டும்.

**11.3.6 நாடுகள், மீன் மற்றும் மீன்வளத் துணைப்பொருட்களின் வணிகத்தில் பழக்கத்திலுள்ள தர நிர்ணயத்தை இணக்கமாகவும், முடிந்த வரையில் ஒரே மாதிரியாகவும் பன்னாட்டு அளவில் ஏற்கப்பெற்ற வரையறைக்குட்பட்டு அமைத்துக் கொள்ள வேண்டும்.**

71 இயலும் இடங்களில் நாடுகள் தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு வரையறைகளை பொருத்தமாக்குதல் வேண்டும். கொடக்ஸ் அலிமண்டேரியஸ் மற்றும் விஉஉநி ஆகியவற்றின் வரையறை மேம்பாடுகளில் விறுவிறுப்புடன் பங்கு கொள்ள வேண்டும். பொருத்தமாக்குதல் இல்லாத நிலையில் வேறான கட்டுப்பாட்டு முறையை அறிவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அவை அதே சமமான விளைவை[22] ஏற்படுத்துவதை காட்டுதல் வேண்டும். மீன் மற்றும் மீன் பொருட்களின் பன்னாட்டு வர்த்தகத்தைப் பாதிக்கும் பிறவரையறைகளுக்கும் இதே அணுகுமுறை ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

**11.3.7 நாடுகள், மீன் மற்றும் மீன்வளத் துணைப்பொருட்களின் வணிகம் தொடர்பான புள்ளி விபரங்களை அவற்றுடன் தொடர்புடைய தேசிய நிறுவனங்கள் மற்றும் பன்னாட்டு அமைப்புகளிடமிருந்து சேகரித்து, சரியான நேரத்தில் பொருத்தமான அளவில் தகுந்த காலத்தில் அவற்றைப் பரப்ப வேண்டும்.**

72. நாடுகள் விபரங்களை சரியான நேரத்தில் துல்லியமாக சேகரித்து பரவச் செய்ய வேண்டும். பன்னாட்டு வர்த்தகம் மீதான புள்ளியியல் விபரங்களும் இதில் அடங்கும். உள்நாடு மற்றும் பன்னாட்டு சந்தைகளை வர்த்தகத்திற்கு ஏற்படும் பாதிப்புகள் மற்றும் மீன்வள மேலாண்மை கொள்கைகள் ஆகியவற்றைப் புரிந்து கொள்ள இது முக்கிய அடிப்படையாகும். அதன் பயன்பாட்டை மேம்படுத்த நாடுகளால் சேகரிக்கப்படும் விபரங்கள் நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் மீன்பிடிபாடு ஆகியவற்றை வேறுபடுத்திக் காட்ட வேண்டும். பன்னாட்டு நிறுவனங்கள் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் மண்டல மீன்வள மேலாண்மை அமைப்புகள் மற்றும் தேசீய அல்லது மண்டல நிறுவனங்கள் பொதுமக்களுக்கு புள்ளியியல் விபரங்களை வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த நிறுவனங்களால் பரவும் விபரங்கள் பிரிவோடு ஒத்துழைப்பை சிறப்பாக மேம்படுத்த உதவுகிறது.

73. புள்ளியியல் விபரங்கள் உள்ளிட்ட மீன்வளம் மற்றும் வர்த்தகம் தொடர்பான விபரங்களை சேகரித்து பரவச் செய்வதற்கான திறனை மேம்படுத்த வளரும் நாடுகளுக்கு உதவிட வளர்ந்த நாடுகள் ஊக்கப்படுத்தப்படுகின்றன.

74. உவேஅ மற்றும் மீன் விபர வலை அமைப்பு [23] மீன் வர்த்தகம் பற்றி விரிவான விபரங்களை வழங்குகிறது. ஆர்வமுள்ள குழுவினருக்கு மீன் வர்த்தகம் தொடர்பான விபரங்கள் உடனடியாகக் கிடைப்பதை நாடுகள் உறுதி செய்ய வேண்டும். அறுவடையாளர் பதப்படுத்துவோர், சிறு வியாபாரிகள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் நுகர்வோர் உள்ளிட்ட உரிமைதாரர்களின் தேவையை விபர சேவைகள் கருத்தில் கொள்ள வேண்டும்.

---

[22] சுதாசாசு மற்றும் வதொத ஒப்பந்தங்கள் தொடர்புடைய ஒப்பந்தங்களாகும்.

[23] மீன் விபர வலை அமைப்பு பார்க்க வலைத்தளம் www.fishinfonet.com or to www.globefish.org for additional information.

**11.3.8 நாடுகள், மீன் மற்றும் மீன்வளத் துணைப்பொருட்களின் வணிகம் தொடர்பான அனைத்துலக வணிக அமைப்பு மற்றும் அதனைச் சார்ந்த நிறுவனங்களின் சட்டம், ஒழுங்கு நிருவாகத் தன்மை இவற்றில் செய்யப்படும் மாற்றங்கள், மேம்பாட்டு முறைகள் ஆகியவற்றை நன்கு கவனித்துப் பிற ஆர்வமுள்ள நாடுகளுக்கு உடனடியாகத் தெரிவித்து அவ்வணிகம் வளர்ச்சியடைய உதவ வேண்டும்.**

75. புதிய சாட்சி மற்றும் தொழில்நுட்ப, விஞ்ஞான வளர்ச்சி ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள நாடுகள் தவறாது சட்டம், ஒழுங்கு அமைப்புகள் மற்றும் முறைகளை திருத்தி அமைக்க வேண்டும். வர்த்தகம் ஒரு சுறுசுறுப்பான நடவடிக்கை. சரியான நேரத்தில் கிடைக்கும் துல்லியமான விபரங்களை சார்ந்து உள்ளது. துரிதமான, வெளிப்படையான மற்றும் பரவலான, சட்டங்கள், ஒழுங்கு அமைப்புகள், நிர்வாகம் மற்றும் இயக்க முறைகளுக்கு மாற்றங்கள் மற்றும் மேம்பாடுகள் பற்றிய அறிவிக்கை அடிப்படையானது. தாமதம் தேவையற்ற செலவினம் திறன் இன்மை ஆகியவை பன்னாட்டு மீன்வர்த்தகத்தில் தவிர்க்கப்பட வேண்டும்.

76. வர்த்தக அமைப்பின் இயக்கத்தை எளிதாக்க மற்றும் நாடுகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களின் இணக்கத்தை ஊக்கப்படுத்த நாடுகள் துரிதமாக அறிவித்து விபரங்களைப் பரிமாற்றம் செய்ய வேண்டும். உவநிறுவனங்களின் ஒப்பந்தங்களில் பல அறிவிக்கை கடமையைப் பெற்றுள்ளது. இக்கடமைகள் வெளிப்படை மற்றும் இணக்கத்திற்கு உதவுகின்றன. அத்தகைய கடமைகள் பொருந்தாத இடங்களில் நாடுகள் வர்த்தகப் பங்காளர்களுக்கு நேரடியாக மீன் மற்றும் மீன் பொருட்களின் பன்னாட்டு வர்த்தகம் தொடர்பான மாற்றங்கள் மற்றும் மேம்பாட்டினைத் தெரிவிக்க வேண்டும்.

## பார்வைக்குறிப்புகள்


**உவேஅ.** 1995. பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு. உவேஅ, ரோம். 41 பக்.

**உவேஅ மீன்வளத்துறை.** 1998. பொறுப்பார்ந்த மீன் உபயோகம். *உவேஅ பொறுப்பார்ந்த மீன் வள நடவடிக்கைக்கு தொழில் நுட்ப வழிகாட்டு முறைகள்.* எண். 7. ரோம், உவேஅ. 33 பக்

**உவேஅ** 2005. மீன்வளத்தில் கடல் மீன்பிடிபாட்டிலிருந்து பெறப்படும் மீன் மற்றும் மீன் பொருட்களுக்கு சூழல் அடையாள முத்திரை சீட்டு வழங்குவதற்கான வழிகாட்டு முறைகள். ரோம், உவேஅ. 90 பக் (மூன்று மொழிகளில்).

**குரியன், ஜே.** 2005. பொறுப்பார்ந்த மீன் வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு, உவேஅ மீன்வள தொழில் நுட்ப அறிக்கை. எண். 456. ரோம், உவேஅ. 102 பக்.

பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு கட்டுரை 11.2 ‘‘பொறுப்பார்ந்த பன்னாட்டு வணிகம்’’ மற்றும் 11.3 ‘‘மீன் வணிகம் தொடர்பான சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகள் ஆகியவற்றை செயல்படுத்துவதற்கு உதவிட பொதுவான அறிவுரை வழங்குவதே இந்த தொழில் நுட்ப வழிகாட்டு முறைகளின் முக்கிய நோக்கமாகும். உலகம் முழுவதிலும் பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பை செயல்படுத்தி மேலும் புரிந்து கொள்ள பரவச்செய்ய இந்த வழிகாட்டு முறைகள் உதவுகின்றன: i) உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேலாக பன்னாட்டு வணிகத்திற்குள்ளாகும் விவசாயம் மற்றும் உணவுப் பொருட்களுக்குள் மீன் மற்றும் மீன் பொருட்கள் அடங்கும். எனவே இப்பிரிவில் ஈடுபடும் அனைவரும் அதே மாதிரியான விதிகளுக்கு ஏற்ப இயங்க வேண்டும் என்பதனை உறுதி செய்வதை குறிப்பாக இது முக்கியப்படுத்துகிறது. ii)வளரும் நாடுகளுக்கு மீன் மற்றும் மீன்பொருள் வர்த்தகம் மிகவும் முக்கியமானது. பன்னாட்டு மீன் மற்றும் மீன் பொருள் வர்த்தகத்தின் 50 சதவிகிதத்திற்கு மேல் வளரும் நாடுகளில் இருந்தே தொடங்குகிறது. அந்த நாடுகளுக்கு வருமானம், வேலை வாய்ப்பு மற்றும் அந்நியச் செலாவணி அளிக்கும் ஆதாரங்களில் இது மிகவும் முக்கியமானது.

ISBN 978-92-5-106188-6 ISSN 1020-5292

9 789251 061886

TC/M/I0590E/1/01.09/2200

*Translated and Printed by the Bay of Bengal Programme*
*Inter-Governmental Organisation*
*August 2010*